Get Your Loans Approved
Best Finance in Your Area
We Can Help you with
MORTGAGES*
Residential Mortgages
Re-mortgages
Further Advance
Buy to let
INSURANCES*
Building Insurance
Content Insurance
Life Insurance
OTHER SERVICES
Self Employment Reg
Vat Reg & Cancellation
Reference letters
Payroll Solution
BUSINESS FINANCE
Commercial Mortgage
Commercial Loans
Business Overdraft
LOANS FOR ANY PURPOSE
Secured Loans
Credit And Finance 0208 900 9090
Visit us: 1 Lancelot Parade, Lancelot Road, Wembley HA0 2AJ
Web: www.creditandfinanceltd.com
Email: creditandfinance@gmail.com

# பார்வை

INSEIN Tamil Newsletter/ அறிவியல் வழிகாட்டி


FREE ISSUE மாதம் இரு வெளியீடு Published twice a month

ISSUE 21/2017
SUN, 12TH NOV 2017

1, LANCELOT ROAD, WEMBLEY, HA0 2AJ
TEL : 0208 813 1810
MOB : 079 0843 7921
WEBSITE: WWW.INSEIN.CO.UK
EMAIL: INFO@INSEIN.CO.UK

UNIQUE Financial Accountants
Accountants and Tax Advisors
Accountancy Services for self-employed, partnership & limited companies
Our Main Services Include:
- Accountancy Services for self-employed
- Partnership and limited companies
- Accounts Preparation
- Book Keeping
- Self-Assessment
- Payroll
- VAT Returns
- Tax Consultancy
- Company Formation
- Business Plan
Get your Accounts done by Professionals!!
Special Offer
Real Time Payroll Services and Self Assessment Return all for £999 Per Year
For more information call: 020 8900 9052
Visit us: Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL
Email: info@uniqueaccountants.biz
UNIQUE

## அரசியல் அமைப்பு சபையில் வழிகாட்டுக் குழு அறிக்கை உள்ளூராட்சித் தேர்தல் கூட்டமைப்பிற்குள் பிளவுகள்



கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அரசியல் அமைப்பு சபையாக மாற்றப்பட்டுள்ள பாராளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்புத் தொடர்பான வழிகாட்டுக் குழுவின் அறிக்கை தொடர்பான விவாதம் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. இச் சம்பவங்கள் தமிழ் அரசியலில் குழப்பங்களைத் தோற்றுவித்துள்ளன.

எதிர் வரும் ஜனவரி மாதம் உள்ளூராட்சி தேர்தல்கள் இடம்பெறவுள்ளதால் தமது பலத்தை அதிகரிக்கும் பொருட்டு கூட்டமைப்பிலிருக்கும் கட்சிகள் அரசியல் பேரத்தில் இறங்கியுள்ளன. முதலில் கூட்டமைப்பிலிருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழரசுக் கட்சியோடு தொடர்புகளை முறிப்பதாக அறிவித்தார். இதற்கு ஆதாரமாக அரசியல் அமைப்பு விவகாரத்தில் சுயாட்சி, சுய நிர்ணயம் போன்ற அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுத்துள்ளதாக குற்றம் சாட்டி தமிழரசுக் கட்சியுனான உறவுகளைத் துண்டித்தார். ஆனால் தாம் கூட்டமைப்பில் தொடர்ந்தும் இருப்பதாக அறிவித்தார். மிகவும் பலவீனமான உள் கட்டமைப்பைக் கொண்ட கூட்டமைப்பில் இருப்பதும், விலகுவதும் பாரிய பிரச்சனைகள் அல்ல என்பது அவரது நிலைப்பாடு உணர்த்தியது. அத்துடன் கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியல்ல. இதில் அவர் தமிழரசுக் கட்சியுடனான உறவை மட்டும் முறித்தது ஏன்? என்ற கேள்வி எழுகிறது. கூட்டமைப்பில் ரெலோ அமைப்பும் உள்ளது. அவர்களும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பயணிக்கிறார்கள். அரசை ஆதரித்து வாக்களிக்கிறார்கள். அரசியல் அமைப்பு விவாதங்களில் தமிழரசுக் கட்சியுடன் ஒருமித்து செயற்படுகிறார்கள். அவ்வாறானால் அவர் தமிழரசுக் கட்சியுடன் மட்டும் உறவை முறித்ததன் காரணமென்ன? . .

தொடர்ச்சி பக்கம் 6இல்




JAY VISVA SOLICITORS
Solicitors and Commissioners for Oaths
Furthering your interests
Solicitors
Mr Jeyarajan Visvalingam, MA, LLB (Hons), Solicitor
Mrs Jyothsna Somasundar BAL, LLB (Hons), Solicitor
Mr. Nesar Afsar BA (Hons), Solicitor
Mrs. Lingeswary Balarajan Attoney at Law
Our Staff Speak
Tamil, Kannada, Hindi and Punjabi.
OUR LEGAL SERVICES
Lawyers for your Business
The Law Society
Civil litigation
Commercial Litigation / Disputes
Conveyancing- Commercial & Residential Property
Immigration law
Wills and Probate
Liquor Licensing
Planning law
Family law
Neighbour Disputes
CONTACT US | 0208-573-6673 | 0794-369-8335
ADDRESS | 1st Floor, 784, Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RS
Authorised & Regulated by the Solicitors Regulation Authority. SRA ID: 599586

No more long queues! No more long car drives! No more carrying bags!

# Your Grocery Shopping Gone Easy Now!

Wherever you are in the UK, order all your favourite Sri Lankan "Groceries & Vegetables" from the comfort of your warm and cosy homes and get them delivered at your door step

**Believe it or not!** Now you can even order "Frozen Fish" and other "Frozen food" online!

www.elakkiaonline.com

ELAKKIA
Your convenience is our priority

Login | Search

Home | Groceries | Savouries | Frozen | Fruits & Vegetables

ELAKKIA
We are delighted to announce our new venture elakkiaonline an online shopping channel.



GROCERIES | SPICES | CURRIES & SAUCES | PICKLES & SAMBALS

VEGETABLES & FRUITS | RICE & FLOURS | HEALTH & BEAUTY | KITCHEN & TABLEWARE | SAVOURIES & FROZEN

## FREE DELIVERY*

**on all orders over £35**

Promo Code: **SIL2710**

*Free Delivery offer valid till 31 December 2015
*Terms and conditions apply.



**Save time, trouble and money!**

**www.elakkiaonline.com**

Another new venture from your favourite RUBY'S group

email: info@elakkiaonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்



15ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

பிடவைகள் அனைத்தும் 50% விலைக்கழிவில்

நகைகள் அனைத்தும் என்றும் இல்லாதவரை அதிரடிக் விலைக் கழிவில்

நாம் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எங்களுடைய இனிய தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்களும் ஓர் அதிஷ்டசாலி ஆகுங்கள்.

EXCLUSIVE DESIGNER JEWELS & SAREES

Selvaraja Gold House & Textile

Exclusive Designer Jewellery & Sarees

162b, Mitcham Road London SW17 9NJ

Tel : 020 8767 3795 | 07825 005 269

Dosa Specialist

# Sarasas

South Indian Restaurant



WE SERVE

South Indian, Sri Lankan, Indo Chinese, Tandori & North Indian Dishes

LUNCH TIME OFFER

Mon – Fri from 12 noon to 3.30pm

EVENTS

CATERING

We cater for Wedding, Birthday Parties and Other Events.

FUNCTION HALL

Available for Hire Reserve up to 60 persons

BOOK NOW FOR YOUR NEED

Sarasas South Indian Restaurant

630-634, Uxbridge Rd, Hayes, Middlesex, UB4 0RY

T: 020 8561 8188 | E: info@sarasasrestaurant.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வோல்தம்ஸ்ரோ கற்பகபதி

## கற்பக விநாயகர் கோவில்

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX.
Tel: 020 8523 3819

### விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| 10/11/2017 | வெள்ளிக்கிழமை | அட்டமி |
| 13/11/2017 | திங்கட்கிழமை | ஏகாதசி |
| 15/11/2017 | புதன்கிழமை | பிரதோஷம் |
| 16/11/2017 | வியாழக்கிழமை | கார்த்திகை மாதப்பிறப்பு |
| 17/11/2017 | வெள்ளிக்கிழமை | அமாவாசை |
| 20/11/2017 | திங்கட்கிழமை | சோம வாரம் 1 |
| 21/11/2017 | செவ்வாய்க்கிழமை | மூலம் |
| 22/11/2017 | புதன்கிழமை | சதுர்த்தி |
| 26/11/2017 | ஞாயிற்றுக்கிழமை | அட்டமி |
| 27/11/2017 | திங்கட்கிழமை | சோம வாரம் 2 |
| 29/11/2017 | புதன்கிழமை | ஏகாதசி |
| 01/12/2017 | வெள்ளிக்கிழமை | பிரதோஷம் |
| 02/12/2017 | சனிக்கிழமை | திருக்கார்த்திகை |
| 03/12/2017 | ஞாயிற்றுக்கிழமை | சர்வாலய தீபம் பௌர்ணமி |
| 04/12/2017 | திங்கட்கிழமை | சோம வாரம் 3 விநாயகர் விரதம் |


*Ammanai Saran Addainthal Athika Varam Peralam*

## SHRI KANAGA THURRKAI AMMAN

Founded on 10.08.1991 Charity No. 1014409
5 Chapel Road, London W13 9AE. Tel: 020 8810 0835 & 020 8840 0485
Web: www.ammanealing.org Email: info@ammanealing.org

### தினசரி பூசைகள்

| | | | |
|---|---|---|---|
| 15/11/2017 | - | புதன் | பிரதோஷவிரதம் |
| 16/11/2017 | - | வியாழன் | கார்த்திகை மாதப்பிறப்பு<br>ஐயப்ப மண்டலபூசை ஆரம்பம் |
| 17/11/2017 | - | வெள்ளி | அமாவாசை விரதம் |
| 22/11/2017 | - | புதன் | சதுர்த்தி விரதம் விநாயகர் திருவீதியுலா |
| 24/11/2017 | - | வெள்ளி | ஏகதின இலட்சநாம அர்ச்சனை<br>அம்பாள் தங்கரத பவனி |
| 29/11/2017 | - | புதன் | ஏகாதசி விரதம். லக்ஷ்மி நாராயணர் திருவீதியுலா |
| 01/12/2017 | - | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 02/12/2017 | - | சனி | திருக்கார்த்திகை விரதம்<br>குமாராலயதீபம் முருகன திருவீதியுலா |
| 03/12/2017 | - | ஞாயிறு | பூரணைவிரதம் ஸ்ரீ சக்கரபூசை<br>சர்வாலய தீபம் விஷ்ணுஆலய தீபம்<br>வீடுகளில் தீபம் சிவன் பார்வதி அம்பாள்<br>லக்ஷ்மி நாராயணர் திருவீதியுலா |
| 04/12/2017 | - | திங்கள் | விநாயகவிரதாரம்பம், விநாயகர்<br>லெட்சநாமஅர்ச்சனையாரம்பம் |
| 06/12/2017 | - | புதன் | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| 10/12/2017 | - | ஞாயிறு | தேய்பிறை அட்டமி 10-12-17 அதிகாலை<br>2.30 முதல் 11-12-17 அதிகாலை 1.22 வரை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HAYES மாநகரில் ஒரு புதிய உதயம்

## FENIX PROPERTY SERVICES LIMITED....

அன்பான வீட்டு உரிமையாளர்களே
உங்கள் வீடுகளை விற்கவோ வாடகைக்கு விடவோ சிரமப்படுகின்றீர்களா?
கவலை வேண்டாம்...
உங்கள் அனைத்து தேவைகளையும் மிகவும் துரிதமாகவும் இலகுவாகவும் பூர்த்தி
செய்ய நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

## FENIX PROPERTY SERVICES LIMITED

உங்கள் வீடுகள் HAYES, UXBRIDGE, HILLINGDON, GREENFORD, HARROW,
EALING, NORTHOLT ஆகிய இடங்களில் இருந்தால்
எம்மால் இலகுவாக வாடகைக்கு அமர்த்தி தரப்படும்...



எங்கள் சேவைகள்

**LETTING:**

FREE MARKET APPRAISAL | FREE MARKETING | FREE INVENTORY
REGULAR CHECKING | PROFESSIONAL TENANTS | LOW COMMISSION

**SALES :**

FREE VALUATION |FREE MARKETING LOW COMMISSION
QUICK SALE IN MOST CASES

FENIX
PROPERTY SERVICES

## FENIX PROPERTY SERVICES LIMITED

Tel: 0208 004 1114, Web:fenixps.co.uk
976 Uxbridge Road UB4 0RL


RS Printers Ltd 07765 224 337 / 020 8782 3844

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அமைப்பு சபையில் வழிகாட்டுக் குழு அறிக்கை உள்ளூராட்சித் தேர்தல் கூட்டமைப்பிற்குள் பிளவுகள்

பக்கம் 1இன் தொடர்ச்சி. . . உள்ளூராட்சி தேர்தல்களில் அவரது இழந்த அரசியல் செல்வாக்கை மீளப் பெறுவதற்கு பொருத்தமான எதிரியை அவர் சரியாக தெரிந்தெடுத்துள்ளார். இவரது வெளியேற்றத்தினை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சுமந்திரன் தமது கட்சியின் கதவு சலூன் கதவு போல் உள்ளதாகவும், யாரும் வரலாம், வெளியேறலாம் என்கிறார். அவர் மறைமுகமாக சில கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவே தெரிகிறது. இந்த விபரம் சில வாரங்களில் தெரிந்து விடும். ஆனால் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தேர்ந்தெடுத்துள்ள அரசியல் பல கேள்விகளை முன்வைக்கிறது. அதாவது அரசியல் அமைப்பு சபையில் அவர் முன் வைக்கும் யோசனைகள் என்ன? அந்த யோசனைகளை ஆதரிப்போர் உண்டா? வெறுமனே பெயரளவில் சுயநிர்ணய உரிமை, தேசியம், சுயாட்சி என கோஷங்களை எழுப்புவது அரசியலா? அல்லது குறைந்த பட்சம் சாத்தியமான தீர்வுகளை நோக்கிச் செல்வது அவசியமா? போரின் காரணமாக சமூகம் பல வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளது.

அதற்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க அவர் வைத்திருக்கும் திட்டமென்ன? அவை பற்றி அவரோ அல்லது அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரன் அல்லது கஜேந்திர குமார் பொன்னம்பலமோ எந்த திட்டங்களையும் அறிவிக்கவில்லை. வெறுமனே கோஷங்களை அரசியலாக்கி மக்களை மீண்டும் முள்ளி வாய்க்கால் போன்ற துன்பத்தில் தள்ளும் அரசியலை மக்கள் முழுதாக நிராகரிக்க வேண்டும். பொங்கலுக்கும், தீபாவளிக்கும் தமிழீழம் கிடைக்கும் எனக் கூறிய கதை முள்ளி வாய்க்காலுடன் முடிந்தது. அந்த வேதனை மிக்க நாட்கள் இனி உதவாது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்களின் மனமாற்றம் அவசியம். இந்தப் பணியில் அவரது முன்னாள் சகாக்கள் இறங்கியுள்ளனர். அவர்களைப் பலவீனமாக்கி நிலமைகளைச் சிக்கலாக்க அவரை அனுமதிக்கக் கூடாது. அவரது விமர்சன அரசியல் ஜனநாயகமானது. ஆனால் அவர் முக்கியமான தருணங்களில் அதன் பங்காளியாக இருந்த பின் தேர்தலில் நிராகரிக்கப்பட்டதும் தற்போது தாம் புதிய அரசியல் பேசுவதாக கருதுவது மக்களை முட்டாள்களாக எண்ணுவதற்கு ஒப்பானது. போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு வாழ்வும் முக்கியம். சுயநிர்ணய உரிமையும் முக்கியம். இந்த இரண்டுக்குமான சமநிலையைக் காண வேண்டும். அதுவே தற்போது தமிழ் அரசியல் எடுத்துள்ள பாதையாகும். இது வெற்றிக்கான பாதை அல்ல. யதார்த்தத்தை உணர்த்தும் பாதையாகும்.

தேர்தல் அரசியலைப் பயன்படுத்தி மக்களை தேவையில்லாத அளவிற்கு இன்று சிங்கள இனவாத சக்திகள் புதிய அரசியல் யாப்பின் மூலம் பௌத்த மதத்தை இரண்டாம் தரத்திற்குத் தள்ளியுள்ளதாக சிங்கள மக்களைப் பயமுறுத்துவது போல சுயநிர்ணய உரிமை பறிபோயுள்ளதாக நடத்தும் கபட அரசியல் இனியும் தேவையற்றது எனக் கூறுகிறோம். சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது தமிழரசுக் கட்சியினர் தமது திருப்தியைத் தெரிவிக்க, ரெலோ அமைப்பினர் போதவில்லை எனக் கூறியுள்ளனர். இந்த போலி அரசியலின் முடிவு வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது அம்பலமாகி விடும். ஆனால் கடந்த வரவு செலவுத் திட்டங்களின் போது மௌனமாக ஆதரித்து வாக்களித்தவர்கள் தற்போது வித்தியாசமாகப் பேசுவது உள்ளூராட்சித் தேர்தல்களை குறிவைத்தே என்பதைப் புரிய முடிகிறது. தமிழரசுக் கட்சியை மூலைக்குத் தள்ள எடுக்கும் முயற்சியே. இந்த ஏமாற்று அரசியல் அதிகாரத்தைக் குறிவைத்து மக்களை ஏமாற்றி வாக்குகளைக் கொள்ளை அடிக்க எண்ணுவது மிகவும் மோசமானது. மக்களை ஏமாற்ற இனியும் அனுமதிக்க முடியாது.

வழிகாட்டுக் குழுவின் அறிக்கை தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கூட்டமைப்பினதும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் கவனத்திற்குரியவை. 1972ம் ஆண்டிலும், 1978ம் ஆண்டிலும் சமரப்பிக்கப்பட்ட அரசியல் யாப்புகள் பிரதான அரசியல் கட்சிகளால் திணிக்கப்பட்டவை. ஆனால் புதிய யாப்பு யோசனைகள் நியாயமான அளவு ஜனநாயக அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவும், அதன் பின்னர் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு, அதன் பின்னர் மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு அதன் பின்னரே அது முறையான அரசியல் யாப்பாக அமையும் என அவர் கூறினார். இந்த விபரங்களைச் சிங்களக் கட்சித் தலைவர்கள் கூறவில்லை. தமிழ் அரசியல் கட்சியின் முக்கிய தலைவர் கூறுகிறார். சிங்கள மக்களின் வாக்கெடுப்பு அவசியம் என்கிறார். இது 70 வருட சுதந்திரத்திற்குப் பின்னதான அரசியல் வரலாற்றில் முதல் தடவையான மாற்றமாகும்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தை நிராகரித்துச் செல்பவர்கள் சாத்தியமான மாற்று வழிகளை மக்கள் முன் வைக்க வேண்டும். இலங்கை மக்கள் தமது இறைமை அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் அமைப்பை அங்கீகரிக்கும் நிகழ்வு என்பது மிகவும் சிக்கலானது. பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் பாரிய எதிர்ப்புகளுக்கு முகம் கொடுத்துள்ளன. இலங்கை மக்களுக்கும், உலகத்திற்கும் நல்லாட்சியைத் தருவதாக கூறிய இக் கட்சிகள் அதனை நிறைவேற்றி ஆக வேண்டும். இல்லையேல் தம்மால் முடியாது எனக் கூற வேண்டும். அவ்வாறான நெருக்கடிக்குள் இக் கட்சிகள் உள்ளன. இங்குள்ள பிரதான கேள்வி எதுவெனில் இலங்கையின் ஜனநாயகம் இனவாதிகளால் தோற்கடிக்கபடுவது இரு சமூகங்களுக்கும் ஆபத்தானது. போரிற்குப் பின்னர் பேரினவாத சக்திகளுடன் ராணுவமும் மிகவும் அப்பட்டமாக இணைந்து செயற்படுகிறது. புதிய அரசியல் அமைப்பிற்கு ஆதரவாக வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளுக்குச் செல்ல முடியாது. பாராளுமன்றம் குண்டு வைத்துத் தகர்க்கப்படும் என வெளிப்படையாக கூறும் அளவிற்கு இனவாதம் பலமடைந்துள்ளது. இந் நிலையில் தமிழர் தரப்பில் அரசியல் அமைப்பு முயற்சிகளை நிராகரிப்பவர்கள் இவ்வாறான நிலமைகளை தாம் எவ்வாறு சமாளிக்க முடியும்? என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும்.

போரின் கொடுமைகளால் முழு நாடுமே பெரும் பாதிப்பில் உள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னதான 70 வருட காலங்களில் 30 வருட காலம் போரினால் சிதைந்தது. இன்னொரு போரை நோக்கிச் செல்வதா? அல்லது பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீட்டெடுப்பதா? என்ற கேள்வியைப் பாராளுமன்றத்தில் சம்பந்தன் எழுப்பினார். உலக நாடுகளில் கீர்த்தி மிக்க நாடுகளில் ஒன்றாக நிமிர வேண்டுமெனில் சமத்தவமும், நீதியும் மிக்க சமூகத்தைக் கட்டி எழுப்ப ஒத்துழையுங்கள் என்றார். இந்த வேண்டுகோளைச் சிங்களத் தலைவர் விடுக்கவில்லை. தமிழ்த் தலைவரே விடுத்தார். காரணம் என்ன? சிங்கள மக்கள் இன்னமும் தமிழ்த் தலைமைகளை நம்பத் தயாராக இல்லை. இதனால் மீண்டும் மீண்டும் ஐக்கிய இலங்கைக்குள் சக வாழ்வு நடத்த தமிழ் மக்கள் தயார் என்பதை உரைக்க வேண்டியுள்ளது. தேசிய ஐக்கியத்திற்கான அத்திவாரங்களை பல இடர்களுக்கு மத்தியில் போட வேண்டியுள்ளது.

சிங்கள மக்கள் மத்தியிலே இனவாத அரசியலை நடத்தி நாட்டினை இந்த நிலமைக்கு எடுத்துச் சென்ற கட்சிகள் தமது தவறுகளை உணரத் தொடங்கியுள்ளன. அதே போலவே தமிழ்க் குறும் தேசியவாதத்தினை முன்னெடுக்கும் தமிழ் அரசியல் இன்று தனது தவறுகளையும் உணரத் தலைப்பட்டுள்ளது. இம் மாற்றத்தைப் பலப்படுத்தி தமிழ் மக்களின் வாழ்வினை உயர்த்த புதிய நிலமைகளைப் பயன்படுத்த வேண்டும். அரசியல் அமைப்பினை நிராகரிப்பவர்கள் சிங்கள மக்கள் மத்தியிலே நம்பிக்கையையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு அவர்களிடம் உள்ள திட்டங்களை முன்வைக்க வேண்டும். உள்ளூராட்சித் தேர்தல்களை அரசியல் அமைப்பிற்கான வாக்கெடுப்பாக மாற்றும் குறுகிய அரசியலை நிறுத்த வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல்களை அரசியலாக்கி தகுதி வாய்ந்த சமூக சேவையாளர்களை அப்புறப்படுத்தும் அரசியலைத் தடுக்க வேண்டும். உள்ளூராட்சித் தேர்தல்கள் கிராமிய பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், ஜனநாயக விழுமியங்களைப் பலப்படுத்துவதற்கும் நாம் பயன்படுத்த வேண்டுமெனில் முதலில் இத் தேர்தல்களை. அரசியலாக்கும் சக்திகளை மக்கள் நிராகரித்து உண்மையான மக்கள் சேவகர்களை அரசியலுக்கு அப்பால் தெரிவு செய்ய வேண்டும். இத் தேர்தலில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பெண்களே குடும்பத் தலைவிகளாக அதிகரித்துள்ள இன்றைய தமிழ் சமுதாயத்தில் அதற்குரிய இடத்தைப் பெற பெண்களுக்குக் கிடைத்துள்ள இனிய சந்தர்ப்பமாகும்.

பெண்களின் தொகை அதிகரித்துள்ள நிலையில் சமூக பொறுப்புகளை நோக்கி அவர்கள் திரும்புவது காலத்தின் கட்டாயமாக உள்ளது. எனவே அரசியல் கட்சிகளில் பெண்களின் நலன்களில் ஈடுபாடுள்ள அரசியலுக்கு அப்பாலும் செயற்படக்கூடிய பெண்களை இத் தேர்தலில் நியமிக்க வேண்டும்.

தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள இம் மாற்றங்களைக் கவனத்தில் கொண்டும், குறிப்பாக அதிகார பரவலாக்கம், அதிகார பகிர்வு என்பன உள்ளூராட்சி சபைகளின் செயற்பாட்டினை மேலும் விஸ்தரித்துள்ளது. கிராமிய விவசாயம், சிறு கைத் தொழில், சிறு வர்த்தகம், குடிநீர் விநியோகம், கழிவுகளை அகற்றுதல், தெருக்களை அமைத்தல், சிறு சந்தைகளை உருவாக்குதல் என பல கடமைகள் காத்திருக்கின்றன. இதற்கு அரசியல் அல்ல சமூக அக்கறையுள்ள மனிதர்களே தேவை. இவ்வாறான நல்ல மனிதர்கள் இல்லாமலில்லை. ஆனால் அரசியல் அவர்களைத் தடுக்கிறது. எனவே அரசியலிற்கு அப்பால் மக்களுக்குச் சேவை செய்யும் இனிய மனிதர்களை இத் தேர்தல் அடையாளம் காட்ட வேண்டும்.

எனவே போலித் தேசியாவாத அரசியலை நிராகரித்து, போரினாலும், இயற்கைச் சீற்றத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு இத் தேர்தல் புதிய பாதையை வழங்க வேண்டும்.

**பார்வையைத் தபால் மூலம் பெற விரும்பின் இக்கூப்பனை நிரப்பி அதற்கான காசோலையையும் இணைத்து கீழ் உள்ள முகவரிக்கு அன்புடன் அனுப்பிவைக்கவும்.**

[ ] 6 மாத சந்தா (12 பிரதிகள்) £20.00
[ ] 12 மாத சந்தா (24 பிரதிகள்) £38.00

பெற விரும்புவோர் இதை நிரப்பி அனுப்பவும்

பெயர் : _ _ _ _ _ _ _ _ _ _ _ _
முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _
தொடர்பிலக்கம் : _ _ _ _ _ _ _ _ _ _ _ _
மின்னஞ்சல் : _ _ _ _ _ _ _ _ _ _ _ _

PARVAI - Tamil Newsletter
1, Lancelot Road, Wembley, HA0 2AJ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் நியாயமான விலை.... எல்லாமே புத்தம் புது டிசைன்கள்...

வாருங்கள்..! வாங்கி செல்லுங்கள்...



The Leading Jewellery store in London with the largest selections including Diamond Jewellery, Thaali Kodi & all Studded Jewellery

தாலிக்கொடிக்கு 22 CARAT PERFECT சான்றுதழ் வழங்கப்படும்

# Rathy Jewellers Ltd

28 Ealing Road, Wembley, HA0 4TL. Tel: **020 8903 3063**

Unit 6, Plaza Parade, 29 -33 Ealing Road, Wembley HA0 4YA. Tel: **020 8900 0818**

**Opening Time:**

Monday - Saturday: 10.00am - 6.30pm, Sunday: 11.00am - 6.30pm

எங்களிடம் வரும் பழைய நகைகள் 24ct தங்கமாக மாற்றப்பட்ட பின்னர்தான் மீளத் தயாரிக்கப்படுகிறது. அதனால் எல்லா நகைகளுக்கும் 22 கரட் சரியாக இருக்கும்.


noolaham.org | aavanaham.org

HARROW INDEPENDENT COLLEGE

*School of Mathematics, Science & Economics*



# Your Pathway to Top British Universities

## Harrow Independent College

308-310 Eastcote Lane, Harrow, HA2 9AH, United Kingdom

Tel: +44 (0)208 423 6227 Mobile: +44 (0)7957 317668

www.harrowindependentcollege.co.uk

### With our Individual Learning Plan (ILP)

**UNIVERSITY PREPARATION PROGRAM – (UPP)**

- GCE AS/A2 Advanced Level Courses
- UCAS application advice
- Special coaching to write expert personal statements
- Individual coaching for University interviews
- Expert career advice by industry professionals
- Small class sizes (max. 8)

### Specialisation leads to

- Medicine / Dentistry
- Electrical and Electronics Engineering
- Aerospace or Aeronautical Engineering
- Econometrics
- Computer Systems Engineering
- Physical Sciences

*Expert, dedicated and committed teachers with over 20 years experience in teaching. In the past 5 years we have helped many students to secure places at top Universities.*

CALL US NOW ON

**020 8423 6227**

We are ready to help and support your child to achieve a Better and Brighter Future.

edexcel Approved Centre from Pearson

UCAS We are a UCAS registered centre

ASIC ACCREDITATION SERVICE for INTERNATIONAL SCHOOLS, COLLEGES & UNIVERSITIES

We will help all students to realise their maximum potential!


# பார்வை

பார்வையின் 6ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

# அந்தித் தமிழ் அரங்கம்



பார்வையின் 6ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழக் கலை, கலாச்சார, மொழியை முன்னிலைப்படுத்தி அதன் வாசகர்களுடனும், வர்த்தக ஆதரவாளர்களுடனும், பார்வையின் அபிமானிகளுடனும் அந்தித் தமிழ் அரங்கம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் தைப்பொங்கல் நன்நாளில் (2018) இவ் அந்தித் தமிழ் அரங்கம் இடம்பெறும். முக்கிய நிகழ்ச்சியாக சிறப்புப் பாடகர்கள் போட்டி இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

அடுத்த இதழில் நிகழ்ச்சிகள் பற்றிய முழுமையான விபரங்கள்

இடம் பெறவுள்ள நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**Insein Team – பார்வை**

**Tel: 0790 843 7921**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SCHELIAN LAW
SOLICITORS
COMMISSIONERS FOR OATHS

A.F. Ilanchelian
SOLICITOR
Commissioners for Oaths

# 24 Hours

# Crime & Immigration Service

# 07939 474 342

**Immigrations Related Applications and Appeals**

- Immigration
- EEA Law
- Entry Clearance
- Human Right Claims
- Asylum Claim
- Citizenship and Nationality
- Detention & Deportation
- Judicial Review

**Family Matters & Property**

| | |
|---|---|
| Divorce Matters | Residential |
| Ancillary Relief | Commercial |
| Other Family Matters | Landlord |

SQM Delivery Partnership

**NO WIN NO FEE**

- Personal Injury
- Road Traffic Accident
- Slip and Trip
- Work Related Accidents
- Clinical Negligence

**Crime** (Public Funding Available)

24 hour Police Station Representation,

Representation at Magistrate/Crown Courts

Property – உடமைகள் • Residential Property • Commercial Property • Lardlord & Tenancy Matters

வடமேற்கு லண்டன் பகுதியில் மிகுந்த
பிரபல்யத்துடன் தனது வாடிக்கையாளர்களுக்கு
மிக உயர்தர சேவையும் ஆலோசனையையும்
வழங்கி வரும் சட்ட நிறுவனம்

10 Palmerston Rd, Harrow, HA3 7RR

TEL: 020 7139 8631, MOBILE: 07939 474 342

Authorised and Regulated by the Solicitors regulation Authority. SRA No. 634258

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
- Democratic Socialist Republic of Sri Lanka



கடந்த இதழில் தொடர்ச்சி. . .

1739ல் வீரநரேந்திரசிங்கனின் மரணத்தையடுத்து அடுத்த வாரிசு பற்றிய சிக்கல் எழுந்தது. இவன் தெலுங்கு பேசும் நாயக்கர் மரபின் இளவரசியொருத்தியைத் திருமணம் செய்திருந்தான். அவளுக்கு குழந்தையும் பிறக்கவில்லை. நரேந்திரசிங்கனுக்கும் அவனது சிங்களப் பணிப்பெண்ணொருத்திக்கும் பிறந்த மகனான "உனம்புவே பண்டார" என்பானுக்கு அரசுரிமை இருந்த-போதிலும், வெலிவிட்ட சரணங்கர பிக்குவின் ஆதரவு-டன் நரேந்திரசிங்கனின் மனைவியின் சகோதரனுக்கு அரசுரிமை கிடைத்தது. ஓராண்டின்பின், புதிய மன்னன் சிறீ விசயராசசிங்கன் எனும் பெயருடன் பதவியேற்றான். நாயக்கர் வம்ச மன்னர்கள் டச்சுக்காரரின் ஆதிக்கப் பகுதிகள் மீது பல்வேறு தாக்குதல்களை மேற்கொண்ட-போதிலும் அவற்றில் எதுவும் வெற்றியளிக்கவில்லை.

நெப்போலியப் போர்களின் போது, பிரான்சியர் நெதர்லா-ந்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இதனால், இலங்கை பிரான்சியரிடம் வீழ்ந்துவிடுமோ எனப் பயந்த பிரித்-தானியா 1796இல், சிறிய எதிர்த் தாக்குதல்களுக்கு மத்தியில் நாட்டின் கரையோரப்பகுதிகளைக் (இப்ப-குதியை அவர்கள் சிலோன் என அழைத்தனர்.) கைப்-பற்றியது. இரண்டாண்டுகளுக்குப் பின், 1798ல், மூன்றாவது நாயக்க மன்னனான ராசாதிராசசிங்கன் காய்ச்சல் காரணமாக இறந்தான். இவனது இறப்பின்பின், ராசா-திராசசிங்கனின் மைத்துனனான பதினெட்டு வயதுடைய கண்ணுசாமி முடிசூட்டப்பட்டான். சிறீ விக்கிரமராசசிங்கன் எனும் பெயரை ஏற்றுக்கொண்ட இவ் இளம் மன்னன், 1803ல் பிரித்தானியரின் ஆக்கிரமிப்பை எதிர்கொண்டு அதனை வெற்றிகரமாக முறியடித்தான். ஏமியன் ஒப்பந்-தப்படி அன்றிலிருந்து நாட்டின் கரையோரப்பகுதி முழுவதும் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆட்சிக்குட்பட்டது. ஆயினும், இரண்டாம் கண்டியப் போரில் கண்டியை வெற்றி கொண்ட ஆங்கிலேயர், பெப்ரவரி 14, 1815ல் முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். இலங்கையின் இறுதி மன்னனான சிறீ விக்கிரமராசசிங்கன் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டான். கண்டிய ஒப்பந்தம் மூலம் முழு நாடும் அதிகாரபூர்வமாக பிரித்தானியப் பேரரசின் ஆட்சி-க்குட்பட்டது. 1818ல் இலங்கையரால் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக நடத்தப்பட்ட ஊவா கலகம் ஆளுநர் ரொபேர்ட் பிறவுன்றிக்கினால் அடக்கப்பட்டது.

இலங்கையின் நவீனகாலம், 1833இல் ஏற்பட்ட கோல்புறூக்-கமரன் சீர்திருத்தத்துடன் ஆரம்பிக்கிறது. இதன் மூலம் நாட்டில் பயனோக்கு சார் தாராண்மைவாத அரசியல் பண்பாடு தோற்றுவிக்கப்பட்டதுடன் கண்டிய மற்றும் கரையோர மாகாணங்களை இணைத்து ஒரே அரசாங்-கமும் உருவாக்கப்பட்டது. ஒரு நிறைவேற்றுச் சபையும் சட்டவாக்கச் சபையும் உருவாக்கப்பட்டன. இவையே பிரதிநிதித்துவ அரசியலுக்கு அடித்தளமிட்டன. இக்காலப்-பகுதியில், சோதனை அடிப்படையிலான கோப்பிப் பயிர்ச்செய்கை வெற்றி பெற்றது. விரைவில், கோப்பி நாட்டின் முதன்மை ஏற்றுமதிப் பொருளாகியது. 1847 பொருளாதார நெருக்கடி காரணமாக கோப்பியின் விலை-யில் வீழ்ச்சி ஏற்பட்டமையால், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது. இதனால் ஆளுநர் துப்பாக்கிகள், நாய்கள், கடைகள், படகுகள் மற்றும் பலவற்றின் மீது புதிய வரிகளை விதித்தார். மேலும், ராசகாரிய முறை மீண்டும் வேறு வடிவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, மக்கள் ஆறு நாட்களுக்கு சம்பளமின்றி வீதியமைக்கும் பணியில் ஈடுபட வேண்டும் அல்லது அதற்குரிய பணத்தைச் செலுத்த வேண்டும் எனும் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இக் கொடிய சட்டங்கள் மக்களை வெறுப்படையச் செய்தமையால் 1848ல் இன்னொரு கலகம் ஏற்பட்டது. 1869இல் எமிலியா வசுட்ராட்ரிக்சு எனும் இலை நோய் கோப்பிப் பயிர்களுக்கு ஏற்பட்டது. அடுத்த பதினைந்து வருட-ங்களில் கோப்பிப் பயிர்ச்செய்கை முற்றாக அழிந்தது. பிரித்தானியர் கோப்பிக்கு மாற்றாக தேயிலையைப் பயிரிடத் துவங்கினர். அடுத்த தசாப்த காலத்தில் இலங்கையில் தேயிலை உற்பத்தி வளர்ச்சியடைந்தது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாரியளவிலான இறப்பர்ப் பயிர்ச்செய்கையும் ஏற்படுத்தப்பட்டது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில், இலங்கை சிவில் சேவை மற்றும் சட்ட, கல்வி மற்றும் மருத்துவச் சேவைகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் பிரித்தானிய அரசாங்கத்தின் முடிவின் காரணமாக, இலங்கையில் சாதி மற்றும் இனம் கடந்த புதிய கல்விகற்ற சமூக வகுப்பு ஒன்று உருவானது. இனத்துவ அடிப்படையி-லமைந்த இலங்கைச் சட்டவாக்கக் கழகத்தில் இப் புதிய தலைவர்கள் பல்வேறு இனக் குழுக்களின்



பிரதிநிதிகளாக அங்கம் வகித்தனர். பௌத்த மற்றும் இந்து மீளெழுச்சி, கிறித்தவ மதப்பரப்புக்கு எதிராக செயற்பட்டது. 20ம் நூற்றாண்டின் முதல் இரு பத்தாண்-டுகளிலும் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட்டனர். எனினும் இவ்வொற்றுமை நிலைக்கவில்லை. 1919ல், முக்கிய சிங்கள மற்றும் தமிழ் அரசியல் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பொன்-னம்பலம் அருணாசலம் அவர்களின் தலைமையின்கீழ், இலங்கைத் தேசிய சங்கத்தை உருவாக்கின. இச்சங்கம் அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு குடி-யேற்றத் தலைமைக்கு அழுத்தம் கொடுத்தது. எனினும், ஆளுநரால் உருவாக்கப்பட்ட "கொழும்பு ஆசனத்துக்கு" உரிய நியமனத்தின் போது ஏற்பட்ட "இனத்துவப் பிரதிநிதித்துவப்" பூசல் காரணமாக சிங்களவருக்கும், தமிழருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டதோடு, 1920களின் நடுப்பகுதியில் இச்சங்கம் நலிவடைந்தது. 1931ன் டொனமூர் சீர்திருத்தம், இனரீதியான பிரதிநி-தித்துவத்தை ஒழித்து சகலருக்குமான வாக்குரிமை-யை அறிமுகப்படுத்தியது. (சீர்திருத்தத்துக்கு முன் வாக்குரிமை பெற்றோர் சனத்தொகையின் 4% மானோர் மட்டுமே.)

இம் மாற்றம் தமிழ் அரசியல் தலைமைகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. மேலும், சட்டவாக்கக் கழகத்துக்கு மாற்றாக புதிதாக உருவாக்கப்பட்ட அரசுக் கழகத்தில் தாம் சிறுபான்மையினராக மாறிவிடுவோம் எனவும் அவர்கள் உணர்ந்து கொண்டனர். 1937ல், தமிழ்த் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் அரசுக்கழகத்தில் 50-50 பிரதிநிதித்துவத்தைக் (சிங்களவருக்கு 50% மும் ஏனைய இனக்குழுக்கள் அனைத்துக்கும் 50% மும்) கோரினார். எனினும் 1944-45ல் அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி சீர்திருத்தத்தில் இக்கோரிக்கை ஏற்றுக்கொ-ள்ளப்படவில்லை.

### விடுதலைக்குப் பின்

சோல்பரி அரசியலமைப்பு இலங்கைக்கு மேலாட்சி நிலையை அளித்தது. மேலும், பெப்ரவரி 4, 1948ல் இலங்கை விடுதலை அடைந்தது. D. S. சேனநாயக்க இலங்கையின் முதலாவது பிரதமராகப் பொறுப்பேற்றார். முக்கிய தமிழ்த் தலைவர்களான பொன்னம்பலம் மற்றும் அருணாசலம் மகாதேவா போன்றோர் இவரது அமைச்சரவையில் இடம்பெற்றனர். பிரித்தானிய அரசுக் கடற்படை 1956 வரை திருகோணமலைத் துறைமுகத்-தில் நிலைகொண்டிருந்தது. அரிசிப் பங்கீட்டு முறையை நீக்கியமை காரணமாக நாடுமுழுவதும் ஏற்பட்ட குழப்ப நிலையால் பிரதமர் டட்லி சேனநாயக்க பதவி விலகினார். S. W. R. D. பண்டாரநாயக்க 1956ல் பிரதமராகத் தெரிவு-செய்யப்பட்டார். சிங்களப் பண்பாட்டின் பாதுகாவலன் எனத் தன்னை அறிவித்துக் கொண்ட இவர் மூன்று வருடங்கள் பதவி வகித்தார். இவர் சர்ச்சைக்குரிய சிங்களம் மட்டும் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதன்மூலம் சிங்கள மொழி நாட்டின் ஒரே ஆட்சி மொழியாக்கப்பட்டது. 1958ல் பகுதியளவில் மீளமைக்க-ப்பட்டாலும், இச்சட்டம் தமிழ்ச் சமூகத்தின் அழிவுக்கு வழிவகுப்பதாக அமைந்தது. தமிழர்கள் இச்சட்டத்தை தமது மொழிக்கும் பண்பாட்டுக்கும் ஏற்பட்ட அச்சுறுத்-தலாகக் கருதினர். இச்சட்டத்துக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சி அறவழிப் போராட்டமொன்றை மேற்-கொண்டது. இதனால் ஏற்பட்ட இனமுறுகல் நிலையைத் தணிக்கும் முகமாக பண்டாரநாயக்க, தமிழரசுக் கட்சியின் தலைவர் S. J. V. செல்வநாயகம் அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றை (பண்டா-செல்வா ஒப்பந்தம்) ஏற்படுத்திக் கொண்டார். எவ்வாறாயினும், இவ்வொப்பந்தத்துக்கு எதிராக பௌத்த பிக்குகளாலும், எதிர்க்கட்சியாலும் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அரசின் குடியேற்றத் திட்டங்கள் சிங்கள மற்றும் தமிழ்த் தலைவர்களிடையே கசப்புணர்வு வளரக் காரணமானது. 1959ல் கடும்போக்கு பௌத்த பிக்கு ஒருவனால் பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டார்.

1960ல் S. W. R. D. பண்டாரநாயக்கவின் மனைவியான சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்றார். 1962இல் ஏற்பட்ட கலகத்தையும் வெற்றிகரமாக எதிர்-கொண்டார். இவரது இரண்டாம் பதவிக்காலத்தின் போது அரசு சமவுடமைப் பொருளாதாரக் கொள்கை-ளைக் கடைப்பிடித்தது. சோவியத் ஒன்றியம் மற்றும் சீனாவுடன் உறவுகளைப் பலப்படுத்திய அதேவேளை அணிசேராக் கொள்கையையும் கடைப்பிடித்தது. 1971இல், இலங்கையில்மாக்சியப் புரட்சி ஏற்பட்டது. எனினும், இது உடனடியாக அடக்கப்பட்டது.

1972ல் மேலாட்சி நிலை ஒழிக்கப்பட்டு நாடு குடியரசானது. நாட்டின் பெயரும் சிறீ லங்கா என மாற்றப்பட்டது. சிறுபான்மையினருக்கெதிரான அடக்குமுறைகளும் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்களால் தூண்டப்பட்ட இன உணர்ச்சியும் 1970களில் வட பகுதியில் தமிழ்ப் போராட்ட இயக்கங்களின் வளர்ச்சி-க்கு வழிகோலின. நாட்டின் பின்தங்கிய பிரதேசத்து மாணவர்களுக்கும் பல்கலைக் கழகக் கல்வியை வழங்கும் முகமாக சிறிமாவோ அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறையினால், பல்கலைக்கழகங்களில் திறமைவாய்ந்த தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டது.

இது தமிழ் ஆயுதப் போராட்டத்துக்கு உடனடிக் காரணியாக அமைந்தது. 1975ல் நிகழ்ந்த யாழ்ப்பாண நகரமுதல்வர் அல்பிரட் துரையப்பாவின் படுகொலை திருப்புமுனை வாய்ந்ததாக அமைந்தது.

அடுத்த இதழில் தொடரும் . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# GANAPATHY CASH & CARRY

*For all your Groceries & Seafood*

## GANAPATHY CASH & CARRY & WINE MARKET

*For all Your Home Needs Under One Roof*

Tel: 020 87954627 | Fax: 020 89033185 | Email: stantonys@btconnect.com

- இலங்கை உணவுப்பொருட்கள்
- இந்திய உணவுப்பொருட்கள்
- பழ வகைகள்
- உடன்மரக்கறி வகைகள்
- கடலுணவுப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள உங்கள் நினைவில்
என்றும் இருக்க வேண்டிய இடம்

- Fresh Vegetables
- Chilled food
- Fresh Food
- Frozen Food
- Frozen Sea Food
- Refrigerated Room for Vegetables
- Pooja Items

- Srilankan, Indian News
- Indian Grocery
- Cookware
- International Calling Cards
- Wine Mart
- Wheel Chair Access

*Opening Hours:*
*6.00 a.m. - 12.00 p.m. (Midnight)*

CAAVERI

MATHANGI

Niru Brand
நிரு பிராண்ட்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

# WINE MART

**Incorporated in the Ganapathy Chain**

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான உள்நாட்டு,
வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் குளிர்பானங்கள் கிடைக்கும்

**34-38 Ealing Road, Wembley, Middx HA0 4TL**










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்




வரும் ராகு கேது பெயர்ச்சி உங்களுக்கு நற்பலன்களைத் தரும் வகையில் அமையும். மூன்றாம் இடத்தில் அமரும் கேதுவின் அருளால் எந்த ஒரு விஷயத்தையும் ஒருமுறைக்கு இருமுறை ஆராயும் மனப்பக்குவம் தோன்றும். உங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அநாவசிய இழப்புகளைத் தடுக்கும். மனோ தைரியத்துடனும், திடமான சிந்தனைகளுடனும் செயல்படுவீர்கள். மனதில் ஒரு விஷயத்தைக் கற்பனை செய்துகொண்டு அதனை நடைமுறைப்படுத்திப் பார்ப்பதில் தனி ஆர்வம் உண்டாகும். கேதுவின் மூன்றாம் இடத்துச் சஞ்சாரம் உடன்பிறந்தோருடன் சிறிது கருத்து வேறுபாட்டினைத் தோற்றுவிக்கலாம். உங்களது செயல்வெற்றிகள் அடுத்தவர்களின் பொறாமைப் பார்வைக்கு உங்களை ஆளாக்கும்.

மறைமுக எதிரிகள் காணாமல் போவார்கள். ஆயினும் கூடஇருந்தே குழி பறிப்பவர்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. குடும்பப் பெரியவர்களின் மனவிருப்பத்தினை நிறைவேற்ற முயற்சிப்பீர்கள். உடன்பிறந்தோருடன் ஒத்துப்போவதால் மட்டுமே பூர்வீக சொத்துகளில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும் என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுங்கள். உடன்பிறந்தோரின் குடும்பங்களில் நடைபெறும் விசேஷங்களில் உங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறும். முக்கியமான பணிகளுக்கு அடுத்தவர்களை நம்பியிருக்காமல் நீங்களே நேரடியாக காரியத்தில் இறங்குவது நல்லது. அரசாங்கத் தரப்பிலிருந்து எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரும். புதிய சொத்து வாங்க முயற்சிப்போருக்கு கால நேரம் கூடிவரும். விலகியிருந்த உறவினர்கள் நெருங்கி வருவார்கள்.

இதுநாள் வரை 10ம் இடமாகிய தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து தொழில் முறையில் கடும் அலைச்சலைத் தந்து வந்த ராகு தற்போது 9ம் இடத்தில் அமர்வது ஓரளவிற்கு முன்னேற்றத்தினைத் தரும். பூமி லாபம் என்பது இந்த நேரத்தில் கிடைக்கும் வாய்ப்பு உள்ளதால் விவசாய நிலங்கள், வீட்டு மனைகள் வாங்கும் வாய்ப்பு உருவாகும். இந்த நேரத்தில் வாங்கும் அசையாச் சொத்துகள் உங்கள் பரம்பரைக்கே உதவும் வகையில் நிலைபெறும் தன்மை உடையதாக இருக்கும். பெற்றோர் மற்றும் உங்கள் வாரிசுகளின் உடல்நிலையில் கவனம் செலுத்துவது அவசியம் ஆகிறது.

விடுபட்டிருந்த பிதுர்கர்மா ஒன்றினை செய்து முடிக்கும் வாய்ப்பு இந்த நேரத்தில் கிடைக்கும். 9ம் இடத்து ராகு அயல்நாட்டுப் பிரயாணத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவார். அலுவல்பணி காரணமாக செய்யும் பிரயாணங்களில் நல்ல ஆதாயம் காண்பீர்கள். சுயமாக வண்டி, வாகனங்களை இயக்கும்போது கூடுதல் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சுயதொழில் செய்வோர் நவீன உத்தியின் மூலம் சிறப்பான தனலாபத்தினை அடைவார்கள். மொத்தத்தில் வருகின்ற ஒன்றரை வருட காலத்தில் அசையாச் சொத்துகள் அமைவதோடு உங்கள் வாழ்வியல் தரத்தை உயர்த்துகின்ற வகையில் இருக்கும்.

பரிகாரம்: செவ்வாய் தோறும் ஆஞ்சநேய ஸ்வாமியின் ஆலயத்திற்குச் சென்று சந்நதியை ஏழுமுறை வலம் வந்து வழிபடுங்கள். நேரம் கிடைக்கும்போது சுசீந்திரம் சென்று ஆஞ்சநேய ஸ்வாமியை தரிசித்து பிரார்த்தனை செய்ய சிரமங்கள் அகலும்.




உங்கள் ராசிக்கு எட்டாம் இடமாகிய விரய ஸ்தானத்தில் ராகுவும் 2ம் இடமாகிய தன ஸ்தானத்தில் கேதுவும், இடம்பெயர உள்ளது சற்று சிரமத்தினைத் தரக்கூடும். பொதுவாக ராகு தான் அமருகின்ற ஸ்தானத்தின் பலத்தினை உயர்த்தும் வகையில் பலன்களைத் தருவார், கேது அதற்கு நேர்மாறாக தான் இடம்பெறும் ஸ்தானத்தின் பலத்தினைக் குறைத்து பலன்களை உண்டாக்குவார். தன ஸ்தானத்திற்கு கேது வரவிருப்பதால் பொருள்வரவு தடைபடும். விரய ஸ்தானத்திற்கு ராகு இடம்பெயர இருப்பதால் அநாவசியச் செலவுகள் அதிகமாகும். இதனால் பொருளாதார ரீதியாக சற்று சிரமத்தினைக் காண நேரிடும். குடும்ப உறுப்பினர்களால் அவ்வப்போது சிறுசிறு பிரச்னைகளை சந்திப்பீர்கள். பேசும் வார்த்தைகளால் குடும்ப உறுப்பினர்களுடன் கருத்து வேறுபாடு உருவாகக்கூடும். நமது வார்த்தைகள் மற்றவர் மனதைப் புண்படுத்தக்கூடும் என்பதால் கவனத்துடன் பேசுவது நல்லது.

உங்கள் வீட்டு பிரச்னைகள் வெளியே செல்வதால் மதிப்பு, மரியாதை குறைந்து விடும் என்பதை மனதில் கொண்டு செயல்படுங்கள். தாய்வழி உறவினர்கள், சகோதரிகளால் பிரச்னைகள் தோன்றலாம். அவர்களோடு அதிகம் பேசாமல் அமைதி காப்பதால் பிரச்னைகள் பெரிதாகாமல் இருக்கும். எந்தவொரு பிரச்னைக்கும் பொறுமை காப்பதால் மட்டுமே தீர்வு காண முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உயர்கல்வி மாணவர்களும், நெடுநாள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களும் தங்கள் முயற்சியில் முழுமையான வெற்றியினைக் காண்பார்கள். பிள்ளைகளின் வாழ்வியல் நிலையில் முன்னேற்றம் உண்டாகும். எட்டாம் இடத்து ராகுவினால் உடல்நிலை ரீதியாக சிறிது சிரமத்தினை சந்திக்கக்கூடும்.

ஒரு சிலருக்கு நெருப்புக்காயம் தோன்றும் வாய்ப்பு உண்டு. பெண்கள் சமையல் செய்யும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம். அதே போன்று கெமிக்கல்ஸ் துறையில் பணி புரிபவர்கள், உஷ்ணம் சம்பந்தப்பட்ட வேலையில் ஈடுபடுபவர்கள் மிகுந்த கவனத்துடன் இருப்பது நல்லது. கள்வர் பயம் உண்டு என்பதால் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் முதலிய விலையுயர்ந்த பொருட்களை வங்கி லாக்கர்களில் பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய நேரம் இது. கொடுத்த வாக்கினைக் காப்பாற்றுவது சிரமம் என்பதால் எந்த ஒரு விஷயத்தையும் ஒருமுறைக்கு இருமுறை ஆராய்ந்து பேசுவது நல்லது. இந்த ராகு கேது பெயர்ச்சி உங்கள் பொருளாதார நிலையை சற்றே அசைத்துப் பார்க்கும். செலவுகளை சமாளிக்க சற்று சிரமப்படுவீர்கள்.

பழைய சொத்து ஒன்றினை விற்க வேண்டிய சூழலுக்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் முயற்சிக்கு ஒத்துழைக்க மறுப்பார்கள்.குறைந்த விலையுள்ள பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி ஏமாற நேரிடலாம் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம். எந்த ஒரு விஷயத்திலும் தனித்து முடிவெடுக்காமல் நான்கு பேரின் ஆலோசனைகளையும் கருத்தில் கொள்வது நல்லது. ராகுவின் பெயர்ச்சி சோதனையைத் தந்தாலும், அதனைச் சமாளிக்க ஆவணியில் நிகழ உள்ள ராசிநாதன் குருபகவானின் பெயர்ச்சி துணை நிற்கும்.

ஆவணியில் ராசிநாதன் குருபகவான் லாப ஸ்தானத்தில் வந்து அமர உள்ளதால் அதுநாள் வரை உழைத்ததற்கான பலனைக் காண்பீர்கள். ஏதேனும் ஒரு வகையில் தொடரும் பொருள்வரவு உங்களைக் காப்பாற்றும். அநாவசிய பிரச்னைகள் நம்மை நாடி வரும் நேரம் இது என்பதால் இன்னும் ஒன்றரை ஆண்டு காலத்திற்கு வீண் வாக்குவாதம், தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். ராகு கேது பெயர்ச்சியானது உங்கள் ராசிக்கு சுமாரான பலன்களையே தருவார்கள் என்பதால் ராகுருகேது பெயர்ச்சி நாளன்று ஆலயத்திற்கு சென்று சிறப்பு அர்ச்சனை செய்துகொள்வது நல்லது.

பரிகாரம்: பிரதி மாதம் வருகின்ற உங்கள் ஜென்ம நட்சத்திர நாளன்று துர்க்கையை வழிபட்டு வர தடைகள் அகன்று நன்மை காண்பீர்கள். நேரம் கிடைக்கும் போது கும்பகோணத்திற்கு அருகேயுள்ள பட்டீஸ்வரம் துர்க்கையம்மனை தரிசித்து வழிபட நன்மை உண்டாகும்.




கேது உங்கள் ஜென்ம ராசியிலும், ராகு உங்களுடைய ராசிக்கு ஏழாம் வீட்டிலும் இடம் பெயர உள்ளார்கள். பொதுவாக மகர ராசிக்காரர்கள் சனி பகவானின் தாக்கத்தை உடையவர்கள் என்பதால் எதையும் தாங்கும் இதயம் உடையவர்கள் என்றாலும் ராசிக்கு வரும் கேதுவின் இணைவினால் சற்று பலம் இழந்து காணப்படுவார்கள். எதிர்பாராத நேரத்தில் திடீரென்று தோன்றும் தடைகள் உங்கள் முயற்சிகளின் வேகத்தினைக் குறைக்கும். எந்த ஒரு சிரமமான விஷயத்தைப் பற்றியும் அதிகம் கவலைப்படாமல் இருந்து வந்த நீங்கள் சிறுசிறு பிரச்னைகளுக்குக் கூட இந்த நேரத்தில் துவண்டு போகும் வாய்ப்பு உண்டு. மனதில் தத்துவ சிந்தனைகளும், எந்த ஒரு விஷயத்திலும் அதிக ஈடுபாடின்மையும் தோன்றும்.

இதனால் பல சமயங்களில் அடுத்தவர்களுக்காக விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள். குடும்ப விஷயங்களில் உண்டாகும் பிரச்னைகளை எளிதில் தீர்க்க வழி தெரியாது சிரமத்திற்கு உள்ளாக நேரிடும். உடன்பிறந்தோர் உங்களால் ஆதாயம் காண்பார்கள். அதே நேரத்தில் வாழ்க்கைத்துணைவரின் பலம் வாய்ந்த செயல்பாடுகள் உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும்.

குடும்ப விஷயங்களில் அவரது கருத்துக்களோடு ஒத்துப்போவது நல்லது. ஏழாம் இடத்து ராகுவினால் தொழில் முறையில் தூரதேச பிரயாணம் செல்லும் வாய்ப்பு உண்டு. செல்லும் இடங்களில் புதிய நண்பர்களின் சேர்க்கை உருவாகும். அதே நேரத்தில் பெண்களால் அவமானத்திற்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளதால் முன்பின் தெரியாத பெண்களிடம் எச்சரிக்கையாகப் பழகுவது நல்லது. கூட்டுத்தொழில்கள் லாபகரமாக அமையும்.

ரியல் எஸ்டேட் துறையினர், ஜவுளித் துறையினர், மருந்து வியாபாரம், செயற்கை உரம் தயாரிப்பு போன்றோர் சிறப்பான முன்னேற்றத்தினைக் காண்பார்கள். செய்யும் தொழிலில் புதிய முயற்சிகளைப் புகுத்தி நல்ல தன லாபத்தினைக் காண்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் முக்கியமான நேரத்தில் தோன்றும் கவனச் சிதறல்களால் அலுவலகத்தில் சற்று சிரமத்தினை சந்திக்க நேரிடும். ஆயினும், உடன் பணி புரிபவர்களை அனுசரித்துச் செல்லும் மனப்பான்மையால் இழப்புகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள். பதவி உயர்விற்கான வாய்ப்புகள் கடைசி நேரத்தில் வந்து சேரும்.

ராகுவின் சஞ்சார நிலை கூடா நட்பினை தேடிக்கொண்டு வந்து சேர்க்கும். மனிதர்களின் சுபாவம் அறிந்து பழக வேண்டியது அவசியம். ஜென்ம ராசியில் வந்து அமர உள்ள கேது பகவான் விரக்தியான மனநிலையைத் தருவார். என்ன செய்து என்ன ஆகப்போகிறது என்கிற மனோபாவம் மனதில் இடம்பிடிப்பது சகஜமே என்றாலும் சதா அதே நினைப்புடன் இருக்காமல் கடமையைச் செய்வதில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட வேண்டும்.

அந்நிய தேசத்தில் பணிபுரிவோர் தங்கள் பாதுகாப்பில் கவனம் கொள்ள வேண்டியது அவசியம். பணி நிமித்தம் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்கும் வாய்ப்பும் உண்டாகலாம். ஏற்கெனவே, நோய்வாய்ப்பட்டிருப்பவர்கள், உடல்நிலை பலவீனமாக உள்ளவர்கள், தீவிரமாக உடல்நிலையை கவனித்துக் கொள்வது நல்லது.

ஆரோக்யமாக உள்ளவர்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. முன்னோர்களின் சொத்துகளில் புதிய பிரச்னைகளை சந்திக்க நேரலாம். வரும் ஒன்றரை ஆண்டு காலமும் பெரிதாக பாதிப்புகள் ஏதும் நேராது என்றாலும் முற்றிலும் புதிய மனிதர்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.சோம்பல்தன்மையை முற்றிலுமாகத் துறந்து சுறுசுறுப்பாக உழைத்தால் மட்டுமே இந்த சோதனைக்குரிய காலத்தில் முன்னேற முடியும் என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

பரிகாரம்: பிரதி திங்கட்கிழமை தோறும் அருகிலுள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்று இரட்டை அகல் விளக்குகளை ஏற்றி வழிபட்டு வாருங்கள். விநாயகர் அகவல் பாராயணம் செய்து வருவதும் நன்மை தரும். நேரம் கிடைக்கும் போது மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் முக்குருணி விநாயகரை தரிசித்து உங்கள் பெயருக்கு அர்ச்சனை செய்துகொள்ள சிரமங்கள் குறையும்.

அடுத்த இதழில் தொடரும் . ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IT'S NEVER TOO LATE TO LEARN A NEW SKILL

**Hands-on training to take your skills and career to the next level**

pitman training

Enrol NOW for a Pitman Training Diploma and you'll be able to start a new career and earn a good salary without building up big debts!

**Pitman Courses and Diplomas**

- Sage 50 Accounts 2017
- Sage 50 Payroll RTI
- ECDL
- Microsoft Office Courses
- Typaz - Touch Typing
- AAT Accounting - Level 2 & Level 3
- Web & Graphic Design Training
- Legal / Medical Secretary
- Social Media Marketing Training
- Business Management
- IT Support Training - CCNA, MCSE

All our courses can lead to a rewarding and well-paid careers

**CACHE Childcare Courses**



cache for the Children and Young People's Workforce

- Childcare Level 2 Certificate
- Childcare Level 3 Diploma

- ESOL Entry 3 (B1) Exam Preparation Classes
- Cambridge ESOL English Classes
- IELTS Exam Preparation
- PCO Licence - Mini Cab English Exam Preparation and Tests
- Food Hygiene / Health and Safety Training
- Driving Theory Test Preparation Classes
- Personal Licence (Off Licence) Exam Preparation
- Basic Computer Training for Beginners - One to One Classes

## Life in the UK

**B1- Exam Preparation Classes**

- Practice more than 500+ Questions
- NEW - History Questions
- Language support for all our students
- Immigration consultancy support for students



- Impress employers with high level skills
- Qualify quickly with flexible learning
- Get the job you want and earn while you learn

Call us now for FREE and friendly one-to-one career advice

Microsoft® IT Academy Program Member | CompTIA Authorized Partner | cache | bcs Registered Course Provider | CompTIA A+

**Pitman Training Wembley 020 8903 9580**

Web: wembley.pitman-training.com/ Email: wembley@pitman-training.net

Visit us: Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL

## Credit and Finance Limited

1, Lancelot Road, Wembley. HA0 2AJ

வர்த்தக உரிமையாளர்களுக்கு ஓர் நற்செய்தி
புதிய கடன் வழங்கும் திட்டத்தின்படி
உங்களுக்கு கீழ்காணும் கடன் (LOAN)
வகைகளை எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**Starting Capital**
Max up to £150.000

**Working Capital**
Max up to £150.000

**Business overdraft**
Max up to £100.000

Merchant Finance Advance

இவை யாவும் பாதுகாப்பு ஆவணம் (UNSECURED)
இல்லாமல் பெற்றுத்தரப்படும்.

For further details call me now
Mr. S. Kumar: 07961 184 667

# SHIVA SHAKTHI ASTROLOGY



## Pandith: Sai Ram

**SPIRITUAL HEALER**

World famous Indian Astrologer from 9 Generations

30 Years of Experience



ASTROLOGY PREDICTION IS GOD'S GIFT, PASSED DOWN FROM GENERATION TO GENERATION.

Expert in elimination and kind of Black Magic. Complete knowledge of Numerology, Face Reading, Palmistry from Generation to Generation.- Contact us to kown about your Past, Present and Future.

**Removes Black Magic and Evil Spirits and gives Protection**

VEDIC SOLUTIONS ARE AVAILABLE FOR:

| | |
|---|---|
| Health | Education |
| Family | Jadu |
| Marriage | Divorce |
| Love | Children |
| Business | Promotion |
| Court cases | Voodo |

Husband and wife relationship
Obeav, And many more..!

**100% Guarantee**

We can recommend Lucky numbers for all Lotteries

We give suitable solutions for all problems

PRIVATE AND CONFIDENTIAL

We can speak: Hindi, Telugu, English and Tamil

All Religions welcome

Any problems cleared within 9 days

Office Hours: 7 Days a week 10.00AM-8.00PM

Unit 12, Chandani Bazar,
29/33, Ealing Road,
Wembley, Middlesex
LONDON - HA0 4YA
United Kingdom

CALL FOR AN APPOINTMENT
07404 261 999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சூழ்நிலை மாறுகிறதா? மனமாற்றம் ஏற்படுகிறதா? சிந்தியுங்கள் - ஐ.தி.சம்பந்தன் - இலண்டன்

தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக ஏற்பட்டுவரும் சூழ்நிலை மாற்றத்தையும் சிங்கள மக்களிடையே ஏற்பட்டுவரும் மனமாற்றத்தையும் நாம் மிகவும் கவனமாக கருத்தில் கொள்ளவேண்டும். அதே வேளை தமிழ்பேசும் மக்களின் அரசியல் தீர்வை முன்னெடுத்து-வரும் த.தே.கூட்டமைப்பு தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ இரா சம்பந்தன் அவர்களுக்கு ஆட்சியாளரும் சிங்கள அரசியல் கட்சித் தலைவர்களும் வரவேற்பளிப்பதும் மற்றுமோர் சாதகமான சூழ்நிலையாகும்.

தலைவர் சம்பந்தன் ஐயா அவர்களின் அரசியல் அனுகுமுறை அரசியல் அனுபவம் இராஜ தந்திரம் அவரை தமிழ் மக்களின் பெரும் தலைவராக மதிக்க வைத்துள்ளது. சம்பந்தன் ஐயாவின் அரசியல் திறமையும் ஆற்றலும் அவரை இந்த நிலைக்கு உயர்த்தியது. இன்றைய காலகட்டத்தில் அவர் ஆற்றிவரும் பணிகள் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கை உருவாகி வருகிறது. இன்று சர்வதேசநாடுகள் சம்பந்தர் ஐயாவுக்கு பெரும் மதிப்பளித்து வருவதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இதுவும் ஒரு சூழ் நிலை மாற்றம்

இடைக்கால அறிக்கை தொடர்பாக கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்தா அளுத்கமகே ஆற்றிய உரையின்போது வடகிழக்கு மக்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும், அதிகாரம் பகிரப்படவேண்டும். கூட்டு எதிர்க் கட்சியினரைத் தப்பான கண்கொண்டு பார்க்கவேண்டாம். அதிகாரப் பகிர்வுக்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். எதற்கும் பயம் கொள்ளவேண்டாம்.

நாம் மதிக்கும் உன்னதமான அரசியல் தலைவர்களில் சம்பந்தனும் ஒவரகும். அவருக்கான மதிப்பு எமக்கு எப்போதும் உள்ளது. அவர் நீண்டகாலமாக தமிழ் மக்களுக்காகப் போராடிவருகின்றார். அவருடைய காலத்தில் எப்படியாவது பிரச்சனையைத் தீர்த்துவிடவேண்டும். ஆகவே நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். என்றார் அளுத்கமகே. இந்த அடிப்படையில் இடைக்கால அறிக்கை பற்றிய விவாதத்தில் சிங்கள, தமிழ், முஸ்லீம் தலைர்கள் வெளியிட்ட கருதத்துக்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இடைக்கால அறிக்கை தொடர்பாக நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல உரையாற்றுகையில் இலங்கை வரலாற்றில் இரண்டு சந்தர்ப்பங்களில் அரசியல் அமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ்க் கட்சிகளும், தமிழ்மக்களும். குறித்த செயற்பாட்டில் கலந்து கொண்டிருக்கவில்லை. முதல் தடவையாக அனைவரும் ஒருநாட்டவர்களாக பங்கேற்று சட்டவாக்கமொன்றினை மேற் கொள்வதற்கான ஒன்றிணைவு நடைபெற்றுள்ளது. ஒற்றையாட்சி கட்டமைப்பின் கீழ் ஒருமித்த பிளவுபடாத நாட்டுக்குள் அதி உச்ச அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதே எமது நோக்கமாகவுள்ளது. இரண்டு பிரதான கட்சிகளும் மாறி மாறி ஆட்சிசெய்துள்ளன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு பிரதான கட்சி தேசிய பிரச்சனைக்கான தீர்வைமுன்வைக்கும்போது அதனை மற்றைய பிரதான கட்சி எதிர்த்தே வந்துள்ளது. அதனை நாங்கள் வெளிப்படையாக ஏற்றுக்கொள்கின்றோம்.

1956ஆம் ஆண்டில் மொழிப்பிரச்சனைக்கே தமிழர்கள் தீர்வைக் கோரியிருந்தனர். அதிலிருந்துதான் காலத்திற்குக்காலம் இந்தப்பிரச்சனை விரிவடைய ஆரம்பித்தது. இறுதியாக தமிழீழம் தனிநாடு கோரிக்கை வரை தேசிய இனப்பரச்சனை வலுப்-பெற்றிருந்தது. தமிழர்கள் விடயத்தில் தவறிழைத்துள்ளோம். அதற்கான தீர்வை இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தீர்த்துக்கொள்ளவேண்டும். ஆகவே நீண்ட கால தேசியப் பிரச்சனையை தீர்த்துக்கொள்ள வேண்டும்.

தேசிப் பிரச்சனைக்கு தீர்வு காணும்போதுதான் இலங்கையின் தனித்துவம் பாதுகாக்கப்படும். இன,மதங்களை கடந்து இலங்கையர்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்றார் அமைச்சர் கிரியெல்ல பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உரையாற்றுகையில் இலங்கை வாழ் மக்களுக்கு வரலாற்று பூர்வமான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தசந்தர்ப்பத்தை நாம் தவறவிடக் கூடாது. எனவே இனங்களிடையில் முரண்பாடு இல்லாமல் வாழும் சூழலை உருவாக்குவதற்கே நல்லாட்சி அரசாங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது. எப்படியாயினும் இனப் பிரச்சனையைத் தீர்க்கவேண்டும். இதன் பரிகாரமே சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்துள்ளது.

இதன்படி மைத்திரிபால சிறிசேனாவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் ஒரு மேசைக்கு வந்துள்ளனர். ஆகவே இனிமேல் சந்தர்பபம் கிடையாது என்றார் ரகுமான் எம்.பி. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர மனே கணேசன் உரையாற்றுகையில் தேசியப்பிரச்சனைக்கு தீர்வுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமாகும். இதனைத் தீர்த்து வைக்கும் நோக்குடனே புதிய அரசியல் அமைப்பு பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

தமது தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு இரா.சம்பந்தன் அவர்கள் தற்போது இலங்கை இராஜ்ஜிய வியுகத்துக்கு வந்துள்ளார். இதன் காரணமாக தெற்கு மக்களுடன் பேசவந்துள்ளார். எனவே சம்பந்தனை வெறும் கையுடன் அனுப்பவேண்டாம். அவ்வாறு அனுப்பினால் மன்னிக்க முடியாத குற்றம் என்பதை மறந்து விடாதீர்கள் என்று கூறினார் அமைச்சர் மனோ கனேசன். ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற தேசிய தீபாவளிப் பண்டிகையில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பநதன் உரையாற்றுகையில் புதிய அரசியல் அமைப்பின் மூலமாகவே நீண்டகாலப் பிரச்சனைக்கு தீர்வு எட்டப்படவேண்டும். இந்த செயற்பாடுகளின் பிளவுபடாத நாட்டினுள் அதிகாரப் பகிர்வுகளை முன்வைத்து சமதானத்தை உருவாக்க வேண்டும்.

புதிய அரசியல் அமைப்பை தயாரிக்கும் பணிகளைக் குழப்புவதற்கு இரண்டு தரப்பிலும் சிலர் முயற்சிக்கின்றார்கள். ஆனால் நாங்கள் அரசாங்கம் முன்னெடுத்-துள்ள அரசியல் அமைப்பு தயாரிப்பு பணிகளுக்கு ஒட்டுமொத்த தமிழ் மக்கள் சார்பில் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் என்ற உறுதி மொழியை ஜனாதிபதிக்கு வழங்குகிறேன்.

புதிய அரசியல் உருவாக்கத்தில் தமிழ்மக்களின் பூரண ஆதரவு கிடைக்கும். என்றார் இரா.சம்பந்தன் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானபிரகாசம் வெளியிட்ட அறிக்கையில் அதிகாரங்களை உச்சகட்டம் பகிர்வதற்கு கூட்டு அரசு இணங்கியுள்ளதாக பிரதமர் ரணில் கூறியுள்ளார். அது வெறும் வாய் மொழியில் அல்லாமல் நடைமுறையில் வரவேண்டும் என கூறியுள்ளார்.

த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலை-வருமான த.சித்தார்த்தன் வெளியட்ட அறிக்கையில் புதிய அரசியல் அமைப்பிற்கான இறுதி அறிக்கை வரும்வரை நாம் பொறுமை காக்கவேண்டும். இடைக்கால அறிக்கையை நாம் தூக்கி எறிவது புத்திசாலித்தனமல்ல. நாங்கள் புதிய அரசியல் அமைப்பைக் குழப்புவதாக இருக்கக்கூடாது. நாங்கள் இதனைக் குழப்பிவிட்டு சர்வதேச சமூகத்தின் முன்னால் நிற்கமுடியாது.

சர்வதேச சமூகம் நீங்கள் தானே இதைக் குழப்பினீர்கள், நீங்களே உங்கள் பிரச்சனையைப் பாருங்கள் என்று எங்களைக் கைகழுவி விடுவார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர்(கலாநிதி) கண்ணமுத்து சிதம்ரநாதன்அவர்கள் இடைக்கால அறிக்கை பற்றி வீரகேசரியில் வெளியிட்ட கருத்துக்கள் தமிழ் அரசியல் தரப்புக்கள் அனைவரும் தங்களுடைய சொந்த அரசியல் இருப்பு-க்களையும் சிந்தனைகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இன பேதமின்றி சிறுபான்மை, பெரும்பான்மை என்றில்லாமல் இலங்கை மக்கள் என்ற கொள்கையில் சகலருக்கும் சம உரிமைகள் வழங்க-ப்படவேண்டுமென்ற பொறிமுறையின் அடிப்படையில் புதிய இலங்கையின் அரசியல் யாப்பு இருக்கவேண்டும் என்று வாதிடுவது பொருத்தமாக இருக்கும்.

கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசியலைப் பார்த்தவர்கள் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.இலங்கை தேசத்து மக்களை இனபேதமின்றி பார்க்கும் சில சிங்கள அரசியல் தலைவர்களை இன்று பார்க்கி-ன்றோம். தேசிய பிச்சனையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று சிந்திக்கி-றார்கள், செயற்படுகிறார்கள் அவர்களுக்கு மத்தியில் கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசியலில் தம்மை அர்பனித்து கொண்ட திரு.இராசம்பந்தன் அவர்கள் இன்றைய சிங்கள தலைமைகளின் நாடித் துடிப்புகளை நன்றாகக் கணித்தவர்.அவருக்குநிகராக நாம் எவரையும் தற்போதய சமகால அரசியலில் காணமுடியாது.

யாழ் குடாநாட்டிற்குள் இருந்து கொண்டு தங்கள் அரசியல இருப்புக்காக உண்மைக்கு புறம்பான பிரச்சாரத்தை செய்து மக்களைக் குழப்பும் வழிகளை கைவிட்டு, ஆரோக்கியமான கலந்துரையாடல் பகிரங்கவிவாதங்கள் போன்றவற்றில் தங்கள் நியாயங்களை எடுத்துக்கூறி எப்போதும் எட்டவே முடியாத இலக்குகளை எட்டிப்பிடிக்க முடியும் என்ற எண்ணத்தை மகக்ள் மனதில் பதித்து அவர்களை ஏமாற்றுவதை விடுத்து திரு.இரா.சம்பந்தன் தலைமையில் பின்நின்று அவரின் அரசியல் பலத்திற்கு பக்கபலமாக நின்று புதிய அரசியல் யாப்பில் அதிஉச்சமாக எதைப்பெறமுடியுமோ அதை முன்னோக்கி செல்ல வேண்டுமென்பதே இப்போதுள்ள தேவையாகும். ஏன கலாநி சிதம்பரநாதன் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெறுவதற்கு முழுமையான ஆதரவை வழங்குங்கள் - சம்பந்தன்




அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரித்துள்ள எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அவர் நிதானமான ஆக்கபூர்வமான முழுமையான ஆதரவு நல்குவாராக இருந்தால் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெறமுடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதை காரணம் காட்டி தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினைக்குரிய தீர்வுகளை கோராது இருக்க முடியாது என்பதை மூத்த அரசியல்வாதி இரா.சம்பந்தன் ஐயா ஏன் உணரவில்லை என்று நாமல் எம். பி. தனது டுவிட்டர் பக்கத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதலிளிக்கும் வகையில் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதவாது,

ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல தீர்வு ஏற்பட வேண்டுமென்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். கடந்த 70 வருடங்களாக அவ்வாறான ஒரு தீர்வை பெறுவதற்கு தமிழ மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் கடுமையாக உழைத்து வந்திருக்கின்றன. ஏனைய பிரச்சினைகள் உருவாகுவதற்கு அடிப்படைகாரணம், ஒரு அரசியல் தீர்வு ஏற்படாமையேயாகும். எனவே தான் அரசியல் தீர்வு விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியது எமது பிரதானமான கடமையென்று நாங்கள் கருதுகின்றோம். அதன் மூலமாகத்தான் எமது மக்கள் பூரணமான சமாதானத்தையும் சமத்துவத்தையும் பெறமுடியும்.

ஏனைய விடயங்கள் தொடர்பில் நாங்கள் கவனம் எடுக்காமல் இருக்கின்றோம் என்று கூறுவது ஒரு பொறுப்பற்ற பேச்சாகும். உள்நாட்டில் அரசாங்கத்துடனும், பாராளுமன்றத்திலும், வெளிநாடுகளில் சர்வதேசத்துடனும், ஒவ்வொரு விடயங்கள் சம்பந்தமாகவும், கைதிகள் விவகாரம், காணிவிடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலுடங்கடும் முயற்சி எடுத்து வந்திருக்கின்றோம்.

இந்த கருமங்கள் முறையான பாதையில் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை முழுமைபெறாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் என்னவெனில், துவேசவாதிகள், பெரும்பான்மை மக்கள் மத்தியிலும், இராணுவத்தினர் மத்தியிலும், இனத்துவேசத்தை கிளறுகின்றதன் விளைவாக ஏற்படுகின்ற தடைகளேயாகும்.

எம்மை விமர்சிப்பவர்கள் நியாயபூர்வமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகவும், ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும், தங்களுடைய நிதானமான ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவார்களாக இருந்தால் சகல பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. பொறுப்பற்ற பேச்சில் ஈடுபடாமல் அவ்விதமான ஆதரவை நல்கும்படியாக நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

## யாழ். சென்ற சிறப்பு சி.ஐ.டி. குழு மாவை எம்.பி.யிடம் விசாரணை

புங்குடுதீவு பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்யாவின் கொலை தொடர்பிலான பிரதான குற்றவாளி சுவிஸ் குமார் முதலில் கைதுசெய்யப்பட்ட போது தப்பிச் சென்றமை தொடர்பில் அவருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி செய்த அத்தனை சந்தேக நபர்களையும் கைது செய்ய குற்றப்புலனாய்வு பிரிவின் சிறப்பு விசாரணைக் குழு விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஏற்கனவே வடமாகாணத்தில் முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித ஜயசிங்க கைது செய்யப்பட்டு பிணையில் உள்ள நிலையிலேயே இந்த விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி யாழ்ப்பாணம் சென்ற குற்றப்புலனாய்வு பிரிவின் சமூக கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி விசேட விசாரணையாளர் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா தலைமையிலான சிறப்புக் குழு, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் விசேட விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாணி அபேசேகரவின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.ரே.திசேரவின் ஆலோசனைகளுக்கு அமைவாக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது சுவிஸ்குமார் தப்பிச் சென்ற விவகாரம் தொடர்பில் தற்போதும் தேடப்பட்டுவரும் யாழ். பொலிஸ் நிலையத்தில் அப்பொழுது கடமையாற்றிய முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீ கஜனின் வீட்டையும் விசேட சி.ஐ.டி. குழு சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியது. எனினும் இதன்போது அவர் அங்கிருக்கவில்லை எனவும், பெரும்பாலும் சட்ட விரோதமாக நாட்டை விட்டு அவர் தப்பிச் சென்று இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரியொருவர் கேசரியிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினமே சுவிஸ்குமார் தப்பித்த விவகாரத்தில் மாவை சேனாதிராஜா எம்.பி.யிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், விசேடமாக முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கும் அவருக்கும் இடையிலான தொடர்புகள் வித்தியா படுகொலையின் பின்னர் ஊர்காவற்றுறையில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட விரிவுரையாளர் தமிழ் மாறன் உள்ளிட்டோருடன் சேர்ந்து நடத்திய விசேட மக்கள் சந்திப்பு தொடர்பில் இவ்விசாரணைகளில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனைவிட தப்பிச்செல்ல முற்பட்ட சுவிஸ்குமாரை பொதுமக்கள் கட்டி வைத்திருந்த போது அங்கு இடம்பெற்றிருந்த சம்பவங்களை ஒளிப்பதிவு செய்த தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவரின் சாட்சியம் உள்ளிட்ட மேலும் பல சாட்சியங்களையும் வாக்குமூலங்களையும் விசேட பொலிஸ் குழு பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிறிதொரு குற்றச்சாட்டு தொடர்பில் சிறையிலுள்ள பொலிஸ் அதிகாரியான சிந்தக பண்டார, சுவிஸ்குமார் ஆகியோரிடம் சிறைச்சாலைக்குள் வைத்து விசேட விசாரணைகளை முன்னெடுக்கவும் குற்றப்புலனாய்வு பிரிவின் சிறப்புக்குழு ஊர்காவற்றுறை நீதிவானின் அனுமதியையும் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில் சுவிஸ்குமார் தப்பிச் சென்ற விவகாரத்தில் மேலும் சில முக்கிய நபர்களிடம் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும் விரைவில் அதனோடு தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்படுவர் எனவும் விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் அதிகாரியொருவர் சுட்டிக்காட்டினார்.

## பன்னாட்டு கடல்சார் இராஜதந்திர போர்க்களமாக இலங்கை பாகிஸ்தான், இந்தியாவையடுத்து பாரிய சீன போர்கப்பல் வருகை

இந்து சமுத்திரத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் கடல்சார் இராஜதந்திர போர்க்களமாக இலங்கை மாறியுள்ளது. அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தானை தொடர்ந்து சீனாவின் பாரிய போர் கப்பல் ஒன்று இவ்வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளது. இந்த போர் கப்பல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளதாக கடற்படை உறுதிப்படுத்தியது.

கடந்த இரண்டு வாரத்திலிருந்து இன்றுவரையில் இந்தோனேசியா, தென்கொரியா, பங்களாதேஸ், அமெரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் போர்க்கப்பல்கள் கொழும்பில் நங்கூரமிட்டன. இன்று பாகிஸ்தானின் பி எஸ் என் செய்ப் சீனத் தயாரிப்பு போர்க்கப்பல் கொழும்புக்கு வரவுள்ளது. பல முக்கிய நாடுகளின் போர் கப்பல்கள் இலங்கையை நோக்கி நகர்த்தப்படுகின்றமை இந்து சமுத்திரத்தின் மீதான ஆளுமையை வெளிப்படுத்துவே முயல்கின்றன. இதுவரையில் இலங்கையை வந்தடைந்த அனைத்து கப்பல்களும் நல்லெண்ண விஜயத்தின் அடைப்படையிலேயே வருவதாக அந்த நாடுகள் குறிப்பிட்டுள்ளன. ஆனால் அந்த விஜயங்கள் இந்து சமுத்திரத்தின் கடல்சார் பன்னாட்டு இராஜதந்திர நகர்வுகளை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது. உலகின் ஏழு கடல்களுக்குமான சாவி இந்து சமுத்திரத்தில் காணப்படுகின்றது என பல தசாப்பதங்களுக்கு முன்னர் அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். அன்று தொடக்கம் இன்று வரையில் இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவின் செல்வாக்கு உயர்ந்தே காணப்படுகின்றது. இதற்கு அமைவாகவே ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அமெரிக்க பாதுகாப்பு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்தியாவில் இவ்வாறானதொரு பாரிய அமெரிக்க கடற்படை பாதுகாப்பு தளம் இல்லை. ஆனால் அமெரிக்க பாதுகாப்பு கட்டமைப்பிற்குள் இந்தியா சுயாதீன பங்காளியாகவே காணப்படுகின்றது. ஆனால் இந்து சமுத்திரத்தில் ஏற்பட கூடிய புதிய சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கையின் ஒத்துழைப்புகள் இன்றியமையாதவையாகியுள்ளது. இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சீன நகர்வுகள் அண்மைக்காலமாக தீவிரமடைந்துள்ளது. எனவே தான் அமெரிக்க போர்க்கப்பல்களின் பிரசன்னம் இந்து சமுத்திரத்திலும் இலங்கை கடலிலும் அதிகமாக காணப்படுகின்றது. கடந்த வாரம் அமெரிக்க நாசகாரி போர்க்கப்பல்கள் இலங்கையில் நங்கூரமிடப்பட்டிருந்தன. மேலும் இந்தியாவின் மூன்று போர்க்கப்பல்கள் தற்போது கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு நாடுகளின் போர் கப்பல்கள் இலங்கை விஜயத்தை நிறைவு செய்து திரும்புகின்ற நிலையில் பாகிஸ்தான் மற்றும் சீன கப்பல்கள் இலங்கைக்கு வர உள்ளன. இந்த விஜயங்கள் அனைத்துமே தமது ஆளுமையை வெளிப்படுத்தும் வகையிலேயே காணப்படுகின்றது. இம்முறை இலங்கை வரும் சீன கப்பல் கொழும்பினை தொடர்ந்து ஹம்பாந்தொட்டைக்கும் விஜயம் செய்ய உள்ளது. ஹம்பாந்தொட்டை துறைமுகத்தில் சீன திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அந்த திட்டங்களுக்கு உச்சாகமளிக்கும் வகையில் சீன போர் கப்பல் ஹம்பாந்தொட்டைக்கு செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழப்பங்களுக்கு மத்தியில் விசேட பாதுகாப்புடன் இடம்பெற்ற தமிழரசு கட்சியின் முல்லைத்தீவு கிளைக்குழு கூட்டம்



இலங்கை தமிழரசு கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட கிளைக்குழு கூட்டம் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் இன்றையதினம் நடைபெற்றது. கரைதுறைப்பற்று பிரதேச மூலக்கிளையின் தெரிவுக்கூட்டம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச மூலகிளைக்குழு கூட்டம் என்பன இன்றையதினம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் முன்னதாக கரைதுறைப்பற்று பிரதேச கூட்டம் முல்லைத்தீவு பிரதேச செயலக பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம் ஏ சுமந்திரன், மாவை சேனாதிராஜா, சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. விசேட அதிரடிப்படை பாதுகாப்புடன் நடைபெற்ற இந்த கூட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கூட்டத்தின் ஆரம்பம் முதலே புதிய உறுப்பினர் தெரிவில் இழுபறி நிலைகள் காணப்பட்டதோடு குழப்பமும் நிலவியதை அவதானிக்கமுடிந்தது. இந்த குழப்ப நிலை காரணமாக இடையில் கட்சியின் ஆதரவாளர்கள் பலர் விலகி சென்றதை அவதானிக்கமுடிந்தது.

ஒருவகையான பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் சமாதான படுத்தலின் பின்னர் குழப்பம் தணிவடைந்ததோடு தற்காலிகமாக புதிய உறுப்பினர்கள் கரைதுறைப்பற்று கிளைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டதோடு கூட்டம் நிறைவடைந்தது. இருந்தபோதிலும் கூட்டத்தின் உள்ளே குழப்பத்தில் ஈடுபட்ட கட்சியின் ஆதரவாளர்கள் கூட்டம் நிறைவடைந்தபின்னர் வெளியே குழப்பத்தில் ஈடுபட்டதுடன் கைகலப்பில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது.

## ஹிருணிக்காவைத் தவிர ஏனைய 8 பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர் : தீர்ப்பு 24 இல்



கடந்த 2015 ஆம் ஆண்டு தெமட்டகொடையில் வைத்து இளைஞர் ஒருவரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவைத் தவிர ஏனைய எட்டுப் பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி, ஹிருணிக்காவுக்கு சொந்தமானதாக கூறப்படும் வாகனம் ஒன்றில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதாக குற்றம்சுமத்தப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்க உள்ளிட்ட ஒன்பது பேருக்கு எதிராக, சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த கடத்தல் தொடர்பான வழக்கு விசாரணை இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சம்பவத்துடன் தொடர்புடைய எட்டு பேரும் தங்களது குற்றங்களை ஒப்புக்கொண்டுள்ளனர். இந்நிலையில் ஹிருணிக்கா தவிர்ந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட குறித்த எட்டு பேருக்கும் எதிர்வரும் 24 ஆம் திகதி தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 111 ஏக்கர் காணிகள் டிசம்பருக்குள் விடுவிக்கப்படும் : சுவாமிநாதன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடமுள்ள 111 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்காக 148 மில்லியன் ரூபா இராணுவத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ள நிலையில் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் அக்காணிகள் பொதுமக்களிடத்தில் கையளிக்கப்படும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார். மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக வாழ்வாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு சுயதொழில் உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இந்த நிகழ்ச்சித்திட்டம் மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டதுடன் முதற்கட்டமாக மடு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பின்னர் மன்னார் பிரதேச செயலகத்திலும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் அமுல்படுத்தப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் 500 பயனாளிகளுக்கு 50 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்தின் 600 குடும்பங்களுக்கு 60 மில்லியன் ரூபா சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் செலவிடப்பட்டது. அதன்படி 1,100 குடும்பங்களுக்கு 110 மில்லியன் ரூபாவும் அமைச்சினால் செலவிடப்பட்டுள்ளது.

விவசாயம், மிருக வளர்ப்பு, சுயதொழில், சிறிய தொழில் முயற்சிகள் என்பவற்றை ஆரம்பிப்பதற்காக இந்த உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயனாளிக் குடும்பம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா தொகை செலவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த ஆரம்ப நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில், மீள்குடியேற்ற அமைச்சு வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களுக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் முகமாக பல்வேறான திட்டங்களை கடந்த இரண்டரை வருட காலமாக செயல்படுத்தி வருகின்றது. இவ்வருடம் முல்லைத்தீவு மாவட்டத்திற்காக எமது அமைச்சினால் பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்தோர்களில் 578 குடும்பங்களுக்காக வீடுகளை அமைக்க 463 மில்லியன் ரூபாவும், பகுதி சேதமடைந்த வீடுகளை சீரமைப்பதற்காக 43 குடும்பங்களுக்கு 10 மில்லியன் ரூபாவும், பாரிய அளவிலான சுகாதார துப்பரவு திட்டத்துக்காக 330 குடும்பங்களுக்கு 20 மில்லியன் ரூபாவும் குடிநீர் திட்டத்துக்கு 120 குடும்பங்களுக்காக 15 மில்லியன் ரூபாவும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலுக்காக 33 குடும்பங்களுக்கு 30 மில்லியன் ரூபாவும், கல்வித்துறை முன்னேற்றத்திற்கான திட்டங்களுக்காக 59 குடும்பங்களுக்கு 50 மில்லியன் ரூபாவும் வாழ்வாதார உதவித் திட்டங்களுக்காக 600 குடும்பங்களுக்காக 60 மில்லியன் ரூபாவும் சிறு நீர்த்தாங்கிகள் அமைப்பதற்கு 42 குடும்பங்களுக்காக 100 மில்லியன் ரூபாவும் சிகிச்சை நிலையமொன்றை குடும்பமொன்றுக்கு அமைத்துக்கொடுப்பதற்காக 30 மில்லியன் ரூபாவும் இலவச மின்சார இணைப்பு வழங்கலுக்காக 1250 குடும்பங்களுக்கு 25 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக 111 ஏக்கர் காணியை விடுவிக்க இக் காணிக்குள் உள்ள இராணுவத்தின்ரின் பாதுகாப்பு முகாம்களை அகற்றி மாற்றிடத்தில் அமைத்திட 148 மில்லியன் ரூபா தேவை என்பதை அறியத்தந்தத்ன் நிமித்தம் இத்தொகையை அமைச்சரவை பத்திரம் ஒன்றின் மூலம் பெற்றுத்தர நான் இணக்கம் தெரிவித்திருந்தேன். இதன்படி 148 மில்லியன் ரூபா இராணுவத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. கடந்த ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி இத்தொகை வழங்கப்பட்டதற்கு இணங்க 111 ஏக்கர் காணியை பொதுமக்களுக்கு டிசம்பர் மாதத்திற்குள் வழங்குவதற்கான நடைமுறை வேலைத்திட்டங்களை இராணுவத் தரப்பு மேற்கொண்டுள்ளது என்பதனை இத் தருணத்தில் அறியத்தருகின்றேன் என்றார்.

## தீர்வு முயற்சி தோல்வியடைந்தால் சர்வதேசம் தலையிட காரணமேற்படும் : அருட்தந்தை எம். ஜே. இம்மானுவேல்

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெறுவதற்கு விரக்தியின்றி இறுதிவரையில் முயற்சிப்போம். தோல்வியடைந்தால் சர்வதேசம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை தலையீடுகளைச் செய்வதற்கு போதிய காரணங்கள் இருக்கின்ற நிலையில் அரசாங்கம் எம்மை குறை கூறமுடியாது என உலகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் அருட்தந்தை எம்.ஜே. இம்மானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்திருந்த பின்னணியிலும் புதிய அரசியலமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான விவாதங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையிலும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சுதந்திர இலங்கையில் 70 ஆண்டுகளாக பலமுறை சிங்களவர்களால் ஏமாற்றம் அல்லது தோல்வியைக்கண்ட நாம் இம்முறை ஏன் இறுதிவரையில் முயற்சிசெய்ய வேண்டும். தோல்வியடைகின்றபோது அல்லது ஏமாற்றப்படுகின்றபோது சர்வதேசம் அல்லது ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதற்கு நாம் தடையாக இருக்க முடியாது. கடந்த தோல்விகளின் போது நாமே குற்றவாளிகளாகச் சர்வதேசத்தினாலும் ஐக்கிய நாடுகள் சபையாலும் கணிக்கப்பட்டதனால்தான் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அவர்கள் தலையீடு செய்யாமல் இருந்தமைக்கான காரணமாகின்றது. ஆனால் இம்முறை விரக்தியின்றி நம்பிக்கையுடன் இறுதிவரையில் போராடி முயற்சிப்போம். தோல்வியடைந்தால் அல்லது ஏமாற் றப்பட்டால் சர்வதேசம் மற்றும் ஐக்கிய நாடுகள் தலையிடுவதற்கு போதிய காரணங்கள் உள்ளன. நம்மை குறை கூறவும் முடியாது என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய செய்திகள்

## சசிகலா உறவினர்களிடம் 3வது நாளாக ரெய்டு: ரூ.1200 கோடி முதலீடு கண்டுபிடிப்பு



சசிகலா, தினகரனின் உறவினர்கள் வீடுகளில் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில் ரூ.1200 கோடிக்கு முதலீடு செய்ததற்கான ஆவணங்கள், ரூ.6 கோடி ரொக்கம், 15 கிலோ தங்கம், வைரம் மற்றும் பல ஆயிரம் கோடிக்கு சொத்துக்கள் குவித்திருப்பதற்கான ஆதாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. நாடு முழுவதும் ரூ.1000, ரூ.500 நோட்டுகள் செல்லாது என்று மத்திய அரசு கடந்த ஆண்டு நவம்பரில் அறிவித்தது. இதை தொடர்ந்து பல போலி நிறுவனங்கள் மூலம் கருப்பு பணம் மாற்றியது தெரியவந்தது. இந்த நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வருமான வரித்துறைக்கு மத்திய அரசு உத்தரவிட்டது. அதில், சசிகலா, இளவரசி ஆகியோர் இயக்குநர்களாக உள்ள 3 நிறுவனங்கள் போலியாக தொடங்கப்பட்டு, மூடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இந்த நிறுவனங்கள் குறித்து வருமான வரித்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது மொத்தம் 10 கம்பெனிகள் சசிகலா, இளவரசி மற்றும் அவரது உறவினர்கள் பெயரில் தொடங்கப்பட்டு, பின்னர் மூடப்பட்டது தெரியவந்தது. இதனால் சசிகலா மற்றும் அவரது உறவினர்கள் தினகரன், நடராஜன், திவாகரன், விவேக், கிருஷ்ணப்பிரியா, ஷகீலா, அண்ணாநகர் பாஸ்கர், கலியபெருமாள் மற்றும் ஆடிட்டர் செல்வம், வக்கீல் செந்தில் மற்றும் ஏராளமான பினாமிகளின் வீடுகள், அலுவலகங்கள் என மொத்தம் 187 இடங்களில் கடந்த வியாழன் அதிகாலை 6 மணிக்கு அதிரடி சோதனையை தொடங்கினர். நேற்று முன்தினம் 147 இடங்களில் சோதனை நடந்தது. இந்த சோதனையில் 10 கம்பெனிகள் மூலம் ரூ.1012 கோடி வரி ஏய்ப்பு செய்திருப்பது தெரியவந்தது. மேலும், திவாகரன், விவேக், கிருஷ்ணப்பிரியா மற்றும் உறவினர்களின் வீடுகளில் ரூ.1200 கோடிக்கு முதலீடு செய்திருப்பதற்கான ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த ஆவணங்களை ஆய்வு செய்யும் பணிகளை வருமான வரித்துறையினர் தீவிரமாக செய்து வருகின்றனர். அதைத் தொடர்ந்து, மொத்தம் ரூ.6 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டன. அதைத் தவிர 15 கிலோ தங்கம், வைர நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் 147 இடங்களில் சோதனைகளை வருமான வரித்துறையினர் முடித்துள்ளனர். 3வது நாளான நேற்று 40 இடங்களில் சோதனை நடத்தினர். அதில் குறிப்பாக நுங்கம்பாக்கம் மகாலிங்கபுரத்தில் உள்ள விவேக், தி.நகரில் உள்ள கிருஷ்ணப்பிரியா, மன்னார்குடியில் உள்ள திவாகரன் வீடு, கோவையில் மணல் குவாரி அதிபர் ஆறுமுகச்சாமி ஆகியோரது வீடுகளில் சோதனை நடந்து வருகிறது. அதில் குறிப்பாக ஜாஸ் சினிமா குறித்தும், அதில் ரூ.1000 கோடி முதலீடு செய்யப்பட்டது குறித்தும், பறிமுதல் செய்யப்பட்ட ஆவனங்கள் குறித்தும் அதிகாரிகள் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், ஜாஸ் சினிமாஸ் மூலம் செல்லாத நோட்டுகள் மாற்றப்பட்டது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டது. மேலும், சசிகலா பரோலில் வந்தபோது பல சொத்துக்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. அந்த சொத்து ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இது குறித்தும் தீவிரமாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் பினாமி பெயர்களில் முதலீடு செய்யப்பட்டதற்கான ஆவணங்களை கைப்பற்றியிருப்பதாகவும், அதை ஆய்வு செய்யும் பணிகள் தீவிரமாக நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது. இந்த ஆவணங்கள் மூலம் மட்டும் பல ஆயிரம் கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கலாம் என்றும் வருமான வரித்துறையினர் சந்தேகிக்கின்றனர். வருமான வரித்துறையினர் இரவு, பகலாக இந்தப் பணிகளை முடுக்கிவிட்டு செய்து வருகின்றனர். இதைத் தொடர்ந்து, சிபிஐ, அமலாக்கப் பிரிவுக்கு அறிக்கை அளிக்க வருமான வரித்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். ஓரிரு நாளில் இந்த அறிக்கை அளிக்க திட்டமிட்டுள்ளனர். சோதனை முழுமையாக முடிந்தவுடன் முழுமையான விவரங்களை வெளியிட திட்டமிட்டுள்ளதாக வருமான வரித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விவேக், கிருஸ்ணப்பிரியா வீட்டில் 63 மணி நேரமாக நடைபெற்ற சோதனை நிறைவு: முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக தகவல்




ஜெயா டிவி. நிர்வாகியும் இளவரசியின் மகனுமான விவேக்கின் வீட்டில் வருமானவரி சோதனை நிறைவு பெற்றது. சென்னை மகாலிங்கபுரத்தில் உள்ள விவேக்கின் வீட்டில் கடந்த 63 மணி நேரமாக நீடித்த சோதனை நிறைவு பெற்றது. இதேபோல் இளவரசியின் மகள் கிருஷ்ணப்பிரியா வீட்டில் நடந்து வந்த வருமானவரி சோதனையும் நிறைவடைந்துள்ளது. சென்னை மாம்பலத்தில் உள்ள கிருஷ்ணப்பிரியா வீட்டில் 63 மணி நேரம் சோதனை நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. இளவரசியின் மகன் விவேக் மற்றும் மகள் கிருஷ்ணப்பிரியாவிடம் வருமானவரித்துறை அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்தனர். ஆவணங்கள் ஆய்வு செய்து கணக்காளர் மற்றும் பணியாளர்களிடம் நடத்திய விசாரணைக்கு பின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சசிகலாவின் ஜோதிடர் சந்திரசேகர் வீட்டில் 50 மணி நேரம் நடந்த வருமானவரி சோதனை நிறைவடைந்துள்ளது. கடலூரில் உள்ள சந்திரசேகரின் வீட்டில் 5 பேர் கொண்ட அதிகாரிகள் குழு சோதனை நடத்தினர்.

கோவையில் தொழிலதிபர் சஜீன் வீட்டில் நடைபெற்று வந்த வருமானவரி சோதனை நிறைவடைந்தது. கடந்த 60 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற சோதனையில் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். இதேபோல் கோவையில் 8 இடங்களிலும் வருமானவரித்துறை அதிகாரிகள் நடத்திய சோதனை நிறைவடைந்துள்ளது. மணல் ஒப்பந்ததாரர் ஆறுமுகசாமியின் வீடு, காம்ப்ளெக்ஸ், அலுவலகம், செந்தில்குமரன் திரையரங்கம், செந்தில் புருட்ஸ்ரூ ஜாம், சஜீவனின் வீடு, நீல்கிரி பர்னிச்சர் கடை மற்றும் குடோனிலும் நடந்து வந்த சோதனை நிறைவடைந்துள்ளது.

## மக்கள் பாதிப்புகளை கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டு குஜராத் சட்டசபை தேர்தலுக்காக மத்திய அரசு வரி குறைப்பு செய்கிறது

மக்கள் பாதிப்புகளை கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டு குஜராத் தேர்தலுக்காக மத்திய அரசு வரிகுறைப்பு செய்கிறது என்று திமுக செயல் தலைவரும் தமிழக எதிர்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: 213 பொருட்களுக்கான ஜி.எஸ்.டி வரி விகிதத்தை குறைத்து மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி அவர்கள் தலைமையிலான ஜி.எஸ்.டி. கவுன்சில் அறிவித்திருக்கிறது. சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் அவசரகதியில் அமல்படுத்தப்பட்டதால் மக்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும், வணிகர்கள், சிறு மற்றும் குறு தொழில் செய்வோர் அனைவரும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் தொடர்ந்து குரல் எழுப்பியபோதெல்லாம் அமைதி காத்தது மத்திய பாஜ அரசு. ஏன், தி.மு.கவின் சார்பில், ஜி.எஸ்.டி. சட்டத்தை அமல்படுத்துவதை 3 மாதம் தள்ளி வைத்து, முறையாக திட்டமிட்டு பிறகு செயல்படுத்துங்கள் என்று நான் மத்திய நிதியமைச்சருக்கு விடுத்த வேண்டுகோளையும் கூட ஏற்கவில்லை. இங்குள்ள குதிரை பேர அதிமுக அரசும் சட்டமன்றத்தில் தி.மு.க சுட்டிக்காட்டிய பாதிப்புகளையெல்லாம் கண்டுகொள்ளாமல் விரைந்து ஜி.எஸ்.டி சட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தது. அன்று மக்களின் பாதிப்புகளை கண்டுகொள்ள மறுத்த மத்திய பா.ஜ.க. அரசு, இன்று குஜராத் தேர்தல் நேரத்தில் இந்த வரிக்குறைப்பு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறது. மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மனதில் வைத்து இந்த வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது என்பதை விட, குஜராத் தேர்தலை எண்ணி எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதுதான் அக்மார்க் உண்மையாக இருக்கிறது.



ஏன், ஆடிட்டர்களுக்கும் கூட விளங்கவில்லை என்று கூறியிருப்பதிலிருந்து சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் அவசர கதியில் அமல்படுத்தப்பட்டுவிட்டது என்பதை, மத்திய அரசில் கொள்கை முடிவுகளை எடுக்கும் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மற்றும் பா.ஜ.க.வில் உள்ள அமைச்சர்கள் அனைவரும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது புரிகிறது. இதைவிட, உத்திரபிரதேச பா.ஜ.க. அமைச்சர் ராமாபதி சாஸ்திரி, ஜி.எஸ்.டி பற்றி முழுவதும் படித்துப் பார்த்து விட்டு பதில் சொல்கிறேன், என்று கூறிவிட்டு பத்திரிக்கையாளர்களை சந்திக்க மறுத்தது எல்லாம் செய்திகளாக வெளிவந்துள்ளன. இந்த நிகழ்வுகள் எல்லாம் ஜி.எஸ்.டியை செயல்படுத்தியதில் உள்ள சிக்கல்களை வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறது. ஆகவே, ஜி.எஸ்.டியின் கீழ் 213 பொருட்களுக்கு வரி குறைக்கப்பட்டுள்ளது ஒரு துவக்கம் என்றாலும், இதுவே முடிவல்ல என்ற மனநிலையை மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு பெற வேண்டும். ஏனென்றால் ஜி.எஸ்.டி. வரி அதிகபட்சமாக 18 சதவீதத்துக்கு மேல் போகக்கூடாது என்று எதிர்கட்சிகள் மட்டும் கூறவில்லை. மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியனே கூறியிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த 5 மாத காலத்தில் ஜி.எஸ்.டி வரி விதிப்பால் அனைத்து தரப்பு மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பை கணக்கில் எடுத்துக் கொண்டு ஜி.எஸ்.டி.யில் உள்ள 28 சதவீத வரி விதிப்பை (புகையிலை தவிர) அடியோடு ரத்து செய்து விட்டு இனி அதிகபட்ச வரி 18 சதவீதம் மட்டுமே என்ற முடிவினை மத்தியில் உள்ள பா.ஜ.க அரசு எடுக்க உடனடியாக முன் வர வேண்டும். ஒவ்வொரு முறையும் ஜி.எஸ்.டி. கவுன்சிலை கூட்டி வரி குறைப்பு அறிவிப்புகளை வெளியிடுவதற்கு பதில், இனி 18 சதவீத வரியே அதிகபட்ச வரி என்ற நிலையை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய பா.ஜ.க. அரசு எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஒரே பார்வையில்

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. சுதந்திர இலங்கையின் 71 ஆவது வரவு- செலவுத் திட்டமும் நல்லாட்சி அரசாங்கத்தின் 3 ஆவது வரவு - செலவுத்திட்டமுமாக அமைந்த வரவு-செலவுத்திட்டத்தின் விபரம் வருமாறு, வரவு - செலவுத் திட்ட சமர்ப்பிப்பில் பங்குகொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிரணியினர் சைக்கிளில் பாராளுமன்றிற்கு வருகை தந்தனர்.

- நிதியமைச்சர் மங்கள சமரவீர பாராளுமன்றிற்கு வருகை
- சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் சபை கூடியது
- 2018 ஆண்டுக்கான தேசிய வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றேன்: நிதியமைச்சர் மங்கள சமரவீர
- அரச வருமானம் 20 வீதமாக அதிகரிக்க எதிர்பார்ப்பு
- பொருளாதாரம் 20 வீதத்தால் அதிகரிக்கப்படும்
- அரசாங்கம் என்ற ரீதியில் பொருளாதாரத்தில் தீர்க்கமானதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது.




- நீண்ட அபிவிருத்தித் திட்டம் அவசியம் : வணிக ரீதியில் ஸ்த்திரத்தன்மையை தக்கவைத்துக்கொள்ள போராட வேண்டியுள்ளது.
- இந்த வரவு - செலவு திட்டத்தின் மூலம் ஏற்றுமதியை இரட்டிப்பாக்குவதே எமது பிரதான நோக்கமாகும்.
- 2020 - 2040 இலங்கையிலுள்ள அனைத்து வாகனங்களும் எரிபொருள் பயன்படுத்தப்படாத வாகனங்களாகக் கொள்ளப்படும்.
- பணவீக்கத்தை 6 வீதத்துக்கு கீழ் கொண்டு வர முயற்சி எடுக்கப்படும்.
- 2020ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5 சதவீதம் குறைவடையும்.
- எதிர்வரும் காலங்களில் வரையறைகளுடன் வாகன இறக்குமதி : எயார் பாக் இல்லாத வாகனங்கள் இறக்குமதி செய்யப்படமாட்டாது.
- எதிர்வரும் காலங்களில் சூரிய ஒளி மூலம் மின்சாரத்தை பெறல்.
- சொகுசு வாகனங்களுக்கு 25 வீதம் வரி அதிகரிப்பு
- பிளாஸ்டிக் உற்பத்திக்கு 10 வீத வரி
- மின்சார முச்சக்கர வண்டி, மின்சார பஸ் இறக்குமதிக்கான வரி குறைப்பு
- மீனவ, சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் வகையில் கல்கிஸை முதல் இரத்மலானை வரை கடற்கரையோரம் புனரமைப்பு
- பின்னவல யானைகள் சரணாலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு 75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- 2500 வலுக் கொண்ட வாகனங்களுக்கு சிறப்பு வரி
- டீசல் முச்சக்கர வண்டிகளுக்கு 50 ஆயிரம் ரூபா வரி அதிகரிப்பு
- கழிவுகளை அகற்ற 5 வருடம் சலுகை வழங்கப்படும்
- மனித வள அபிவிருத்திக்கு 75 மில்லியன் 3 வருடங்களில் எதிர்பார்ப்பு
- மின்சார முச்சக்கர வண்டிகளுக்காக 90 வீத வரிச்சலுகை
- பழைய முச்சக்கரவண்டி உரிமையாளர் பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு அவர்களின் வாகனங்ளை விற்பனை செய்ய வழிமுறை
- காபன் வரியை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- திண்மக் கழிவு முகாமைக்கு 3000 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- வன விலங்குகளை பாதுகாக்க 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- நாட்டிலுள்ள களப்புகளை பாதுகாக்க மற்றும் புத்தாக்கம் செய்வதற்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- முல்லைத்தீவு, நந்திக்கடல், நாயாறு உள்ளிட்ட 10 களப்புகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை
- நகர்ப்புறங்களில் வெள்ளத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை
- புதிய பல்நோக்கு நீர்த்தேக்கங்களை உருவாக்க நடவடிக்கை
- சுற்றுப்புறச் சூழல் பூங்கா அமைக்க நடவடிக்கை
- நானோ தொழில்நுட்பத்திற்கு சலுகை
- காலநிலைத் திணைக்களத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை
- பசுமை திட்டத்தின் கீழ், ஓடு பாதைகள், நூலகம், தியான மையங்கள் அமைக்கப்படும்
- கால்நடை வளர்ப்புக்கு 10 வீத வரிக் குறைப்பு
- மழைநீர் சேகரிப்பு திட்டம், குளங்கள் நிர்மாணத்திற்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- கடன் அட்டைகளுக்கான பாரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்
- தெரிவுசெய்யப்பட்ட விவசாய உபகரணங்கள் : தேசத்தை கட்டியெழுப்பும் வரிநீக்கம் 55 அடியைவிட நீண்ட படகு கொள்வனவுக்கு 50 வீத கடனை அரசாங்கம் வழங்கும்
- கையடக்கத் தொலைபேசி கோபுரங்களுக்கு கட்டணம் அதிகரிக்கப்படும்
- மீன்பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்படும்
- சிறுதொழில் செய்பவர்களுக்கு விசேட வரிச் சலுகை
- மீன் குளிரூட்டிக்காக 50 வீதம் அரசின் பங்களிப்பு
- சுயதொழிலில் ஈடுபட விரும்பும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் சலுகைகள் வழங்கப்படும்
- சிறிய மற்றும் நடுத்தர வியாபாரக் கடன்களை பெறுவதற்கான எளிய நடைமுறை உருவாக்கப்படும்
- விவசாயிகளுக்கு கடன் வழங்க விசேட கடன் நடவடிக்கை
- புதிய பிணை தொடர்பிலான கடன் அறிமுகம்
- கிராம சக்தி வேலைத்திட்டத்திற்கு 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- வணிக திறன்களை மேம்படுத்த மேலும் சலுகைகள்
- இறக்குமதி, ஏற்றுமதிகளுக்கு புதிய அபிவிருத்தி வங்கி நிறுவப்படும்
- அரச தொழில்நுட்பத் துறைகளுக்கு 5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- ஏற்றுமதி சந்தைக்கு 800 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- விவசாய உபகரணங்களுக்கு வரி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.
- சிறிய மற்றும் நடுத்தர தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களை ஊக்கப்படுத்தல்
- கறுவாப்பட்டை மற்றும் மிளகு உற்பத்தி அபிவிருத்திக்கு 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- சிறுதோட்ட தேயிலை உரிமையாளருக்கு 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- தென்னை உற்பத்திக்கு விசேட வரிக் குறைப்பு
- மாணிக்கக் கல் பட்டை தீட்டுவதற்கு வரி நீக்கம்
- இலங்கையில் மாணிக்கக் கல் பட்டை தீட்டும் மையங்களை மேம்படுத்த நடவடிக்கை
- கப்பல் நிறுவனங்கள் தொடர்பில் முதலீடு செய்ய சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்
- நாட்டிலுள்ள தரமான நிறுவனங்கள் அனைத்தும் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்படும்
- ஜனாதிபதி பிரதேசம் என அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வேலைத்திட்டத்தினை மேலும் அபிவிருத்தி செய்ய 2200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- சுற்றுலாத் தலங்களை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்
- நானு ஓயா, கொழும்பு, எல்ல ரயில் சேவையை மேம்படுத்த நடவடிக்கை
- கறுவாத் தொழில் பயிற்சி பாடசாலை ஊக்குவிப்பு
- விமான நிலையங்கள் சுற்றுலாப் பயணிகளுக்காக மேம்படுத்தப்படும்
- குக்குளு கங்கையை அபிவிருத்தி செய்ய வரி விலக்கு வழங்கப்படும்
- ரோபோ தொழில்நுட்பத்திற்காக மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்
- மாதுறு ஓயா, கல் ஓயா ஆகியவற்றில் விசேட சவாரி சேவையை மேம்படுத்தல்
- வாழைப்பழம் மற்றும் அன்னாசி ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்
- நாட்டில் கோழிப் பண்ணைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்
- மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகளை விரிவாக்குவதற்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் வடிவமைப்பு நிறுவனமொன்று அமைக்கப்படும்.
- வெளிநாட்டவர்களுக்கு உள்நாட்டு காணிகளை வாங்குவதற்கு வரையறை
- எதிர்வரும் 2025இல் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி 3 மடங்குகளால் அதிகரிக்கப்படும்
- உள்நாட்டின் மலர் வர்த்தகத்தினை சர்வதேசம் வரை கொண்டு செல்ல தேசிய மலர்ச்சந்தையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய 10 பில்லியன் ரூபா
- முச்சக்கரவண்டி தொழில் முனைவோரை அதிகரிக்க நடவடிக்கை
- சகல மாணவர்களுக்கான உயர் கல்வி நடைமுறை
- அனைவருக்கும் தரம் 13 வரை கட்டாயக் கல்வி
- முச்சக்கரவண்டி சாரதிகளை சுற்றுலாப் பயண வழிகாட்டியாக்கும் வகையில் இலவச பயிற்சி மற்றும் சுற்றுலா சபையின் அனுமதியுடன் Tuk Tuk என ஸ்டிக்கர் ஒன்றினை காட்சிப்படுத்தி சுற்றுலா துறையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை
- 2500 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை
- நாட்டிலுள்ள அனைத்து முச்சக்கரவண்டிகளையும் ஒழுங்குமுறைப்படுத்த அதிகார சபையொன்று அமைக்கப்படும்
- மாணவர்களுக்கு டெப் வழக்கும் நடைமுறை மேலும் மேம்படுத்தப்படும்
- இளைஞர் கழகங்களுக்கு மேலதிகமாக 2000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- தொழில் மற்றும் திறன் பயிற்சி சாலைகளை அமைக்க அதிக கவனம் செலுத்தப்படும்
- நாட்டில் மேலும் 5 தொழில்பயிற்சி நிலையங்கள் அமைக்க நடவடிக்கை
- இளைஞர்களுக்கு விசேட தொழிற்பயிற்சி பாடநெறி
- நாட்டில் கணக்காளர்களை உருவாக்க விசேட திட்டம்
- டிஜிட்டல் மற்றும் ஸ்மார்ட் தொழில் நுட்பங்களை மேம்படுத்த நடவடிக்கை
- பாடசாலைகளில் ஸ்மார்ட் கல்வி அறைகள் ஸ்தாபிக்க 750 மில்லியன் ஒதுக்கீடு
- ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி
- மாணவர்களின் நலன்களை கருத்திற்கொண்டு 1500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- விசேட தேவையுடைய நபர்க்ளால் முன்னெடுக்கப்படும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வரி நிவாரணம்
- பல்கலைக்கழகங்களில் வைத்திய கல்வியை மேம்படுத்த 1250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- உயர் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை
- யாழ். பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்திற்கு புதிய நூலக வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாட்டிலுள்ள தேசிய வைத்தியசாலைகளை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்த நடவடிக்கை
- கணிதம் போன்ற பாடங்களுடன் அழகியல் பாடங்களை கற்க உயர் தர மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்
- சர்வதேச தரத்திற்கு விளையாட்டுத் துறை மேம்படுத்தப்படும்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான காப்புறுதி திட்டம்
- விளையாட்டு பயிற்சியாளர்களை ஊக்குவிக்க விசேட திட்டம்
- மாத்தளை ஹொக்கி விளையாட்டரங்கை மேம்படுத்த 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- நாட்டில் பல சுகாதாரத் திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை
- நீரிழிவு வைத்தியசாலையை அமைக்க நடவடிக்கை
- தொற்று நோய்களை தடுப்பதற்கான விசேட நடவடிக்கை
- காலி, கராப்பிட்டிய புற்றுநோய் வைத்தியசாலையை மேலும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை
- சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கினை சர்வதேச அளவில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை
- குளிர் பானங்களில் சேர்க்கப்படும் சீனியின் அளிவிற்கு இன்று நள்ளிரவு முதல் விஷேட வரி ஒரு கிராமிற்கு 50 சதம்
- நாட்டிலுள்ள 100 கிராமப்புற விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை
- விளையாட்டுக்கு பயன்படுத்தும் பாதணிகளுக்கான வரி இன்று நள்ளிரவு முதல் குறைப்பு
- குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு 2 இலட்சம் ரூபா நிதி உதவி
- கொழும்புத் துறைமுகத்தை மேம்படுத்த நடவடிக்கை
- 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் மதுபானங்களுக்கு NBT வரி விதிக்க தீர்மானம்
- பாலியல் நோய்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை
- லயன் வீடுகளில் வாழுவோருக்கு 25000 ஆயிரம் வீடுகள் 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- சர்வதேச குற்றங்கள் மற்றும் சட்டங்கள் தொடர்பில் 500 மில்லியன் ரூபா செலவில் விஷேட பொலிஸ் பல்கலைக்கழகம்
- மத்திய அதிவேக வீதிகளை நிர்மாணிப்பதற்காக நிதி ஒதுக்கீடு
- கூட்டு வெள்ளப்பெருக்கிற்கு கட்டுப்பாட்டு முறை
- குறைந்த வசதிகளைக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகரங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை
- சைபர் கிரைம் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படும்
- பொலிஸ் சேவையை மேம்படுத்த விசேட நிதி ஒதுக்கீடு
- பஸ் பயணத்திற்காக ஒருங்கிணைந்த நேர அட்டவணையை அமுல் படுத்த நடவடிக்கை
- இரத்தினபுரி மற்றும் வெலிமடை நீதிமன்றங்களை பிறிதொரு, இடத்தில் அமைக்க நடவடிக்கை
- நகர்ப்புற மறுவாழ்வு திட்டத்திற்காக 24,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- மீள் குடியேற்றத்திற்கு விசேட நிதி ஒதுக்கீடு
- எதிர்காலங்களில் இளவயது குற்றவாளிகள் மற்றும் பிரதிவாதிகள் வேறாக அழைத்துச் செல்லப்படுவர்
- ஐக்கிய நாடுகளின் அமைதிப் படைக்காக இந்நாட்டு இராணுவ சிப்பாய்களின் பாடநெறிக்காக 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- நிதி மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விரைவில் விசாரணை-செய்ய விசேட தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நீதிமன்றம் அமைக்க 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- தொல்பொருள் இடங்கள் பாதுகாக்க நடவடிக்கை
- முன்னேஸ்வரம், அநுராதபுரம் உள்ளிட்ட மத வழிபாட்டு இடங்களில் யாத்திரிகர்களுக்கான ஓய்வறைகள் நிர்மாணிக்கப்படும்
- கலைஞர்களுக்கான விசேட திட்டம்
- அரச சேவையாளர்களுக்கு பொதுக்கொடுப்பனவு முறையொன்றை உருவாக்குதல்
- புராதன மத வழிபாட்டுத்தலங்களை புனர்நிர்மாணம் செய்ய 2500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- தேசிய மதிப்பீட்டு கொள்கைகள் முறைமையை உருவாக்குதல்
- அரச பணியாளர்களுக்கான குழந்தை பராமரிப்பு மத்திய நிலையங்களை அமைக்க நடவடிக்கை
- ஓய்வு பெற்றவர்களுக்கு நிபந்தனையுடன் கூடிய உணவு காப்புறுதித் திட்டம்
- போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கிற்கு 50 ஆயிரம் வீடுகள்
- தேசிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரியை ஒரு வருடத்திற்கு நீக்க யோசனை
- அரச வங்கிகளின் மூலதனச் சந்தையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கை
- வடக்கில் விசேட தேவையுடைய பெண்களுக்கு வீட்டு திட்டம்.
- அரச பணியாளர்களுக்கு வழங்கப்படும் வாகன சலுகையை தொடர்ந்தம் அமுல்படுத்த நடவடிக்கை
- யாழ்ப்பாணத்திற்கு நவீன பொருளாதார மையம்
- அக்ரஹார காப்புறுதித் திட்டம் 2016 இற்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை
- காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலக பணிகளுக்கு 1.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- வடக்கில் விதவைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை
- நேற்றையதினம் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன. குறிப்பாக பருப்பு, கருவாடு, வெங்காயம், உருளைக்-கிழங்கு மற்றும் எண்ணெய் போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டன
- கருவாட்டின் விலை 750 ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- வங்கி நடவடிக்கைகளுக்கு 1000 ரூபாவுக்கு 20 வீதம் வரி
- எதிர்வரும் காலங்களில் சுருட்டு புகையிலை விற்பனை செய்வதற்கான அனுமதி பெறப்படல் வேண்டும்
- சட்டவிரோத மதுபான உற்பத்திகளுக்கு கடும் கலால் சட்டம்
- கடனை மீள செலுத்துவதற்கு 3 வருடத்திற்கு விசேட வரி
- சுங்க கட்டளைச்சட்டத்திற்காக புதிய கட்டமைப்பு
- குறுஞ்செய்திகளுக்கு விசேட வரி
- முகாமைத்துவ அமைப்பொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை
- சட்டவிரோத சிகரெட்டுக்களை தடுப்பதற்காக சிகரெட் இறக்குமதியின் போது அனுமதி பத்திரம்
- குறுஞ்செய்தி விளம்பரங்களுக்கு வரி
- திரவமற்ற மதுப்பொருட்களுக்கு இன்று நள்ளிரவு முதல் விசேட வரி அமுல்
- 2018 ஜனவரி முதலாம் திகதி முதல் மோட்டார் வாகனங்களுக்கான கடன் வசதி இல்லை
- வடக்கில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்காக வீடமைக்க 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு
- வடக்கு, கிழக்கு மக்களின் மீள்குடியேற்ற வீடமைப்பு நடவடிக்கைகளுக்காக 3000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்க யோசனை
- மோட்டார் சைக்கிள், கார் மற்றும் பஸ் தொடர்பில் காபன் வரியை அறிமுகப்படுத்த யோசனை

சர்வதேச பாதையில் நாட்டை அழைத்து செல்வதற்கு இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்டத்தை தயாரிக்க உதவி அனைவருக்கும் நன்றி.

2018 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டம் இரண்டாம் வாசிப்பிற்காக இன்றைய தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதோடு, குறித்த வரவு- செலவுத்திட்டம் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் : ஜோன் அமரதுங்க



எதிர்வரும் 2020 இல் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க சபையில் தெரிவித்தார். இராஜதந்திர ரீதியாக சர்வதேச நாடுகளை நாம் குறுகிய காலத்திற்குள் வெற்றிகொண்டுள்ளோம். எமக்கென்று பெறுமதி ஒன்று ஏற்பட்டுள்ளது. பல நல்ல யோசனைகளை முன்மொழிந்துள்ளோம். இதன்மூலம் நிலையான அபிவிருத்தியினை தக்கவைத்துக் கொள்ள முடியும். சுற்றுலா துறையில் பாரிய முன்னேற்றத்தை காணவுள்ளோம்.

2020 இல் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிக்ரிக்கும் என எதிர்பார்கின்றோம். இதற்கான ஹோட்டல்கள் எல்லா பாகங்களிலும் நிர்மாணிக்கவுள்ளோம். கடலோர ரயில் போக்குவரத்து, சுற்றுலாத் துறைக்கான பொலிஸ் துறையில் அதிக கவனம் செலுத்தவுள்ளோம் என மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இன்று திங்கட்கிழமை 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KRISHNA CASH & CARRY



KRISHNA
FRESHNESS - VALUE - CHOICE

704-708 Uxbridge Road, UB4 0RX London. Tel: 0208 848 1250

BHARAT INDUSTRIAL ENTERPRISES LIMITED
ITC Enduring Value
KINGS
Shankar
SANJANA

The above trademark products are available


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Krishna
RESTAURANT

**700 Uxbridge Road Hayes Greater London UB4 ORX**
**www.krishnarestaurantlondon.co.uk/ Email: infokrishnarestaurant@mail.**




## Krishna Private Catering

Thank you for choosing Krishna or team would make it their pleasure in assisting or planning your future events. Here at Krishna we can cater for events of 10-120 guests on premise. If you choose to have your event at another location of your own choosing we can provide services from 500 -2000 guests or more. We cater for your weddings, office parties, social events, black tie affairs, religious events.

Please also inquire about our weekly corporate discounts of 10% off When you book your lunch or dinner booking with 15 guests or more on Monday to Friday.

Restaurant is the next door of Krishna Cash & Carry. The purchase receipt has to be presented at Krishna Restaurant to enjoy our weekly special buy one and get one free (take away is only applicable on selected items listed on the menu.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரவணைப்பகம்

## ARAVANAIPPAKAM

රැකවරණය






**சிதம்பரம், கள்ளிக்குளம், நொச்சிமோட்டை, ஓமந்தை.** **Sithamparam, Kallikkulam, Nochchimoddai, Omanthai.**

அரவணைப்பகம் ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகளினால் உருவாக்கப்பட்ட நல்லெண்ணக் கருத்துக்களைக் கொண்டு 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்பப் பணிகள் ஓரளவு நிறைவு பெற்றுள்ளது. அதாவது பெரிய ஓர் நிலப்பரப்பைச் சொந்தமாக அதற்கான விலை கொடுத்துப்பெற்றுள்ளார்கள். தற்பொழுது அந்த நிலத்தில் ஓர் குடிசை அமைக்கப்பட்டு ஓர் சிறிய இளம் குடும்பம் ஒன்றை காவலுக்காக குடிவைத்துள்ளார்கள்.

ஆதரவற்ற எம்மவர்களுக்கு தங்குமிட வசதிகள் அமைந்த கட்டடத்தை அவர்கள் அமைக்க முன்வந்துள்ளார்கள். புலம் பெயர் மக்களாகிய நாங்கள் மனம் உவந்து வழங்கும் பொருளாதார உதவி அந்த இல்லத்தில் குடியிருக்க விண்ணப்பித்தவர்களை குடியமர்த்தி ஆதரிக்க, பெரு மனது படைத்த கருணையுள்ளங்கள் பார்வை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உங்களுக்குத் தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நீங்கள் உங்களுடைய நிதிப் பங்களிப்பை பார்வை நிறுவனத்திற்கு ஊடாகவோ அல்லது நேரடியாக அவர்களின் வவுனியா வங்கிற்கோ அனுப்பிவைக்க பார்வை நிறுவனத்தினர் ஆவன செய்துதருவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.




இப்பணியின் புகைப்படங்கள் அடுத்தடுத்த இதழ்களில் வெளியிடப்படும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும், நீங்கள் பார்வை நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தவும் அழையுங்கள்:

இலண்டனில் **0790 843 7921**

insein.pri@gmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கேள்வியும் உங்கள் பதிலும்

1] புதிய நாம் தேரர்களுக்கு வழங்க வேண்டிய கௌரவத்தினை என்றும் வழங்கிவருகிறோம். மஹிந்த ராஜபக்ஷ

2] யுத்தத்தை நிறைவுசெய்யுமாறே மக்கள் என்னிடம் கோரிக்கை முன்வைத்தனர். மஹிந்த ராஜபக்ஷ

3] ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கம் கொண்டுவந்த அரசியலமைப்பில் மக்களது கருத்துக்கள் உள்வாங்கப்படவில்லை.

4] கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் தமது கட்சி நலன் கருதி சில சிந்தனைத்திட்டங்களை அறிமுகப்படுத்தினர்.

5] 1972ஆம் ஆண்டு ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க தேர்தல் முறைமையில் மாற்றங்களைக் கொண்டு வர முனைந்தார்.

6] கூட்டு எதிரணியினர் பாராளுமன்றம் முன்பாக அண்மையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

7] மக்களை திசை திருப்பி தமது அரசியலை முன் கொண்டு செல்வதே கூட்டு எதிரணியினரின் இலக்காக உள்ளது.

8] கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்ட விரைவாக நடவடிக்கை எடுப்போம்.

9] மஹிந்த ராஜபக்ஷ 2014ஆம் ஆண்டு நாடு நிதி நெருக்கடிக்கு முகம்கொடுக்க வழி இல்லாமலேயே தேர்தலுக்கு சென்றார்.

10] இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் காலம் தாழ்த்தப்பட்டாலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவது உறுதி.

11] எக்கிய ரட்ட என்னும் ஒருமித்த நாடு என்ற பதத்தினை நாம் பயன்படுத்த வேண்டும்.

12] எம்முடன் பல தரப்பட்ட விடயங்களில் முரண்பட்ட சம்பந்தன் புதிய அரசியலமைப்பு விவகாரம் விடயங்களில் ஒத்துப்போகின்றார்.

13] கடந்த காலத்தில் சட்டவிரோதமாக செயற்பட்டவர்களுக்கு எதிராக விரைவில் சட்டத்தை நிலைநாட்டுவோம்.

14] வழக்கு நடவடிக்கைகளின் கோப்புகளை மறைக்கமாட்டோம். நீதி அமைச்சர் தலதா அத்துகோரள.

15] ஆரம்ப நடவடிக்கையாக நாட்டில் சுதந்திரத்தை ஏற்படுத்துவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தோம்.

16] 19ஆம் திருத்தச்சட்டத்தினூடாக ஊடக சுதந்திரம், நீதிமன்ற சுயாதீனத்தன்மை, அரச சேவையின் சுதந்திரம் என்பவற்றை மேற்கொள்ள முடியும்.

17] சர்வதேச பிரதிநிதிகளுக்கு, சுதந்திரத்துக்காக நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து கதைக்கின்றோம்.

18] 2015இல் ஆட்சி மாற்றத்தின் போதும் நாம் புதிய அரசியல் அமைப்பு என்ற நிலைப்பாட்டில் இருந்தே செயற்பட்டு வந்தோம்.

19] ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை உருவாக்கவும், தமது கட்சியை பலப்படுத்தவும் ஐ. தே. க. முயற்சிக்கலாம்.

20] நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தக்கவைத்து ஆட்சியை கொண்டுசெல்ல ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கருத முடியும்.

## பதிலை நீங்கள் எழுதவும்

1] எச்சபையொன்றை உருவாக்குவதாயின் அதற்கு மக்களின் ஆணை அவசியமாகும்?

2] என்னை தேர்தலில் தோற் கடிப்பதே சர்வதேசத்தினதும் புலம்பெயர் அமைப்புகளினதும் திட்டமாக இருந்தது என்றவர் யார்?

3] நல்லாட்சி அரசாங்கம் கொண்டு வரவுள்ள எதில் மக்களது கருத்துக்கள் நிச்சயமாக உள்வாங்கப்படும்?

4] ஆட்சி புரியவும் சட்டங்களை வகுக்கவும் எதன் விதிமுறைகளின் ஊடாகவே முடியும்?

5] 1978ஆம் ஆண்டு யார் கொண்டுவந்த அரசியலமைப்பு மிகவும் பலம் பொருந்தியதாக காணப்படுகிறது?

6] காலத்தின் தேவை கருதியே எதனை உருவாக்க நாம் முயற்சித்து வருகின்றோம்?

7] மஹிந்த ராஜபக்ஷவும் எதனைக் கொண்டு வருவதாக வாக்குறுதி வழங்கியிருந்தார்?

8] முப்பது வருட காலம் நாட்டில் நிலவிய பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எது ஒரு போதும் வழி சமைக்காது?

9] உடன்படிக்கையின் அடிப்படையில் எது உருவாக்கப்பட வேண்டும். தலைவர் அனுரகுமார திஸாநாயக்க?

10] எதிர்வரும் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் யாரால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது?

இதில் 23, 24 எனும் பக்கங்களில் இருக்கும் கேள்விகளுக்கு பதிலை எமது முகவரிக்கு அனுப்பி பங்கு பெறுபவர்கள் பெறும் புள்ளிகள் வருடாந்த பரிசுப்போட்டிக்குள் உள்வாங்கப்படும்.

## கடந்த இதழின் 20/2017 - 23ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

| | | |
|---|---|---|
| 1] சரி | 11] சரி | 1] புதிய அரசியலமைப்பை |
| 2] சரி | 12] சரி | 2] அலரிமாளிகையில் |
| 3] சரி | 13] சரி | 3] மக்கள் தொடர் போராட்டத்தை |
| 4] சரி | 14] சரி | 4] வடகிழக்கு |
| 5] சரி | 15] சரி | 5] எதிர்வரும் உள்ளூராட்சி |
| 6] சரி | 16] சரி | 6] சர்வதேசம் |
| 7] சரி | 17] சரி | 7] சிறையில் உள்ள |
| 8] சரி | 18] சரி | 8] விமல் வீரவசன |
| 9] சரி | 19] சரி | 9] லக்ஸ்மன் கிரிகல்ல |
| 10] சரி | 20] சரி | 10] லக்ஸ்மன் கிரிகல்ல |

## கடந்த இதழின் 20/2017 - 10ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1] விசிதபுர போரில்

2] துட்டகைமுனு

3] இலங்கை அரசு

4] தாதுசேனன்

5] ஆசியாவின்

6] சிகிரியாக் கோட்டை

7] யுனெசுக்கோவினால்

8] பண்டைய இலங்கை

முழுப்பெயர் : ____________

தொலைத் தொடர்பு இல : ____________

தபால் குறியீடு (post code) : ____________

Please return to our address

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்பு பரிசுப்போட்டி

## தமிழ் வாக்கியத்தை வாசித்து ஆங்கில மொழிக்கு மாற்றுக

1] அரசியலமைப்பை கொண்டுவருவதற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை மஹிந்த ராஜபக்ஷ.

2] நாட்டிலுள்ள தேசிய பிரச்சினை தீர்வுக்கு அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

3] ஒரு நாட்டை உருவாக்கவும், வழிநடத்திச் செல்லவும் பிரதான காரணியாக இருப்பது அரசியலமைப்பு ஆகும்.

4] ஜனாதிபதி தேர்தலில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்காக வாக்குறுதி வழங்கியிருந்தது.

5] ஆசியாவின் சிறந்த நாடாக எமது நாட்டைக் கட்டியெழுப்புவது எமது நோக்கமாகும்.

6] கடந்த காலத்தில் போராட்டம் மேற்கொண்டவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொலை செய்தார்கள்.

7] முழுப் பாராளுமன்றத்தையும் அரசியல் அமைப்பு சபையாக மாற்றியமைப்பதாக வாக்குறுதி வழங்கப்பட்டது.

8] புதிய அரசியல் அமைப்பு சரியான முறையில் அமைய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

9] 75 தடவைகள் கூடி இடைக்கால அறிக்கை தொடர்பில் ஒவ்வொரு வாக்கியமாக விவாதித்து இறுதி முடிவுக்கு வந்தோம்.

10] பாராளுமன்றத்தில் 2018ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளமையால் பரபரப்பான நிலையில் பாராளுமன்றம் காணப்பட்டது.

## ஆங்கில வாக்கியத்தை தமிழ் மொழிக்கு மாற்றுக

1] The interim report debate of the Steering Committee on Constitutional Reforms would continue on November 05.

2] The Constitutional Assembly decided to continue with the debate on the Interim Report of the Steering Committee.

3] The Assembly had previously allocated three days from Monday to Wednesday for the debate.

4] The Joint Opposition is now creating an unnecessary panic among the ordinary people over the Interim Report.

5] They are trying to fulfil their narrow political purposes by levelling baseless allegations regarding this Interim Report.

6] Some leaders who raise their voice against this report outside Parliament who had no single word in Parliament.

7] The UNP is confident of victory at the upcoming local government election and no need to join another party.

8] The SLFP had not yet taken a decision to compete the local government election jointly with the UNP under one symbol.

9] The United National Party presented appointment letters to 34 new party organizers appointed around the country.

10] The Prime Minister Ranil Wickremesinghe presented the letters to the appointees at party headquarters in Sirikotha.

## இலங்கையைப் பற்றிய கேள்விகள்

1] நெப்போலியப் போர்களின்போது, பிரான்சியர் எதைக் கைப்பற்றிக் கொண்டனர்?

2] 1796இல், சிறிய எதிர்த் தாக்குதல்களுக்கு மத்தியில் நாட்டின் எப்பகுதிகளைக் கைப்பற்றியது?

3] 1798ல், மூன்றாவது நாயக்க மன்னனான யார் காய்ச்சல் காரணமாக இறந்தான்?

4] 1803ல் பிரித்தானியரின் ஆக்கிரமிப்பை யார் எதிர்கொண்டு வெற்றிகரமாக முறியடித்தான்?

5] எப்பொழுதிலிருந்து நாட்டின் கரையோரப்பகுதி முழுவதும் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டது?

6] எப் போரில் கண்டியை வெற்றி கொண்ட ஆங்கிலேயர், முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர்?

7] இலங்கையின் இறுதி மன்னனான யார் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டான்?

8] எவ்வொப்பந்தம் மூலம் முழு நாடும் அதிகாரபூர்வமாக பிரித்தானியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டது?

## கடந்த இதழின் 20/2017 - 24ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1] We can live in a country people with equal rights through the Creation of Constitution.

2] The Army has refused the President's order to release the land.

3] The Government Agent of Mullaitivu has informed the Army's Confident proposal to the people.

4] Those who delivered Confident proposal to the people must perform.

5] The Sri Lankan Muslim Congress will be the determining force of winning in a local council.

6] Our party did unhistorical development in last one and a half years in Kattankudi.

7] We are continuously maintaining the Sri Lankan Muslim Congress's Traditions.

8] The Sri Lankan Muslim Congress may have a chance to create the relationship among Muslims and Tamils in one day.

9] The all Shingala, Tamils and Muslims people living in this country were came from India.

10] The eastern province people mostly voted to Maithiripala Srisena in last president's election.

1] இலங்கையின் நீதி அமைச்சு சம்பவத்தின் நீதிமன்ற விசாரணையை தொடங்குவதற்கு முடிவு செய்துள்ளது.

2] புத்தளத்தில் பத்தளம் மன்னார் வீதி வழியாக புதிய பொதுச்சேவை நிலையம் கட்டப்படவுள்ளது.

3] எம்மால் நல்லாட்சி அரசுக்கு ஊடாக துரித கதியில் அபிவிருத்தி முன்னேற்றத்திற்கு முயற்சிக்கலாம்.

4] புத்தளத்தில் கழிவு நீர் பிரச்சனையை தீர்ப்பதற்கான திட்டமொன்றை முன்மொழிந்து சமர்பித்துள்ளோம்.

5] ஒரு குடும்பத்திலிருந்து ஒரு வேட்பாளர் மட்டுமே தேர்தலில் போட்டியிடலாம் எனும் நடைமுறையை உறுதிப்படுத்தவேண்டும்.

6] எங்களுக்கு அரசியல்வாதியின் குடும்ப அங்கத்தவர்கள், சொந்தக்கார்கள் உள்ளூர் ஆட்சித் தேர்தலில் தெரிவுசெய்யப்பட வேண்டாம்.

7] நாங்கள் புத்திக் கூர்மையானவர்களையும், சமூக சேவையாளர்ளையும் போட்டியிடுவதற்கு கட்டாயப்படுத்த வேண்டும்.

8] பிரதேசசபைத் தேர்தலில் 25% பெண்கள் பிரதிநிதுவத்துக்கான ஒதுக்கீட்டு முன்மொழிவிற்கு அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

9] பெண்கள் சமூகத்திற்கு பெண்களே தலைமை தாங்கலாம் என்கிற நம்பிக்கையை உருவாக்கவேண்டும்.

10] பிரதேசசபைத் தேர்தலின் திருத்தச் சட்டமூலம் நல்ல சாதகமான விடயங்களை கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நோக்கி பயணித்த பஸ் விபத்து உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5ஆக உயர்வு, 40 பேர் காயம்



கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸொன்று, புத்தளம், மதுரங்குளிப் பகுதியில், இன்று காலை 8.15 மணியளவில் விபத்-துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்வடைந்துள்ள நிலையில், 40 பேர் காயம-டைந்துள்ளனர்.

குறித்த பஸ் வண்டியானது அதிக வேகத்துடன் பயணித்த காரணத்தாலேயே இந்த விபத்து இடம்பெற்றி-ருகலாமென தெரிவிக்கப்படுகின்ற நிலையில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை காயமடைந்தவர்கள் புத்தளம் மற்றும் முந்தல் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பஸ்ஸின் சாரதி முந்தல் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ஆடையில் இருந்தது என்ன?



ஆடையகம் ஒன்றில் கொள்வனவு செய்த ஆடைகளில் சந்தேகத்திற்கிடமான வகையில் பொருள் ஒன்று காணப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய பொலிஸாரினால் அரசாங்க இரசாயனவியல் ஆய்வாளரின் பகுப்பாய்வு அறிக்கை ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு காலி பிரதான மஜிஸ்த்-திரேட் அனுமதி வழங்கியுள்ளார்.

காலியில் கடந்த 28ஆம் திகதி தாய் ஒருவர் தனது 19 வயது மகனோடு நகரத்திலுள்ள ஆடையகம் ஒன்றிற்கு சென்று 4,300 ரூபா பெறுமதியான இரண்டு காற்சட்டை-களையும் இரண்டு டி.ஷேர்ட்களையும் கொள்வனவு செய்துள்ளார். வீட்டிற்கு சென்று கொள்வனவு செய்த ஆடைகளை துவைப்பதற்காக வாளி ஒன்றினுள் போட்ட போது ஒரு கட்டை காற்சட்டையின் முன் பகுதியில் பொத்தானுக்கு கீழ் பிரவுன் நிறத்திலான ஒட்டும் தண்மையிலான பொருள் இருப்பதை கண்ட தாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ஆடையிலிருந்த பொருள் என்ன வகையைச் சேர்ந்த இரசாயனம்? அதனால் உடலுக்கு ஏதும் பாதிப்புகள் ஏற்படுமா? என பரிசோதித்து பார்த்து அரசாங்க ஆய்வாளரிடமிருந்து அறிக்கை ஒன்றை பெறுவதற்கு நீதி மன்றில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு காலி மஜிஸ்த்திரேட் அனுமதி வழங்கியுள்ளார்.

## மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது



அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார். மக்களின் வாழ்க்கை நிலையைக் கருத்திற்கொண்டு இந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டு மக்களின் வாழ்க்கையை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான வசதிகளை வழங்க தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகத் தெரிவித்தார். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கொலன்னாவை சாலமுல்லையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள "லக்சந்த செவன"" வீட்டுத் திட்டத்தின் 3 ஆவது கட்டத்தை நேற்று பிற்பகல் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் வழங்கும் இந்த நிவாரண உதவியை காலதாமதமின்றி மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வர்த்தக சமூகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி, விலை குறைக்கப்பட்ட உணவுப்பொருட்களை அதே விலைக்கு நுகர்வோருக்கு கிடைக்கச் செய்வது வர்த்தகர்களது கடமையாகும் என்பதுடன், அவ்வாறு இல்லாதபோது அது தொடர்பாக கண்டறிவதற்கு அரசாங்கம் நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்கும் என்றும் தெரிவித்தார். வரட்சியின் காரணமாக தேசிய உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்-தமையினால் அரிசி மற்றும் தேங்காயின் விலைகள் அதிகரித்துள்ளதுடன், அரிசியை வெளிநாட்டில் இருந்தேனும் கொண்டுவந்து நிவாரண விலையில் மக்களுக்கு வழங்க முடியுமாக இருந்தபோதும் தேங்காயை அவ்வாறு கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சிறந்த வெளிநாட்டுக் கொள்கை காரணமாக இன்று சர்வதேச ரீதியாக இலங்கைக்குக் கிடைக்கும் பொரு-ளாதார உதவிகள் அதிகரித்துள்ளன என்றும் கடன் சுமையிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு கடந்த மூன்று வருட காலப்பகுதியில் அரசாங்கம் மேற்கொண்ட கொள்கைசார்ந்த தீர்மானங்கள் மூலம் பல்வேறு வெற்றி-கள் கிடைத்துள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். நகரங்களை அமைக்க முடியும் என்றபோதும் உயிர்வாழும் நகரங்களை அமைப்பது கடினம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கொங்ரீட் கட்டிடங்களுக்குள் வாழும் மக்களின் வாழ்க்கையை அழகுபடுத்துவதற்கு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் [illegible] உள்ளிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாகாண அபிவிருத்திக்கு பாரிய தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் சமமான அபிவிருத்தியை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். பெருநகர மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை நகர புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் கொழும்பு நகரில் குறைந்த வசதிகளைக் கொண்ட நகரப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நிர்மாணிக்கப்-பட்டுள்ள லக்சந்த செவன வீட்டுத்திட்டத்தின் 3 ஆவது கட்டம் 396 வீடுகளைக் கொண்டுள்ளது.

மீத்தொட்டமுல்ல குப்பைமேடு சரிந்ததில் வீடுகளை இழந்த 87 குடும்பங்களுக்கும் பேர வாவியை அண்மித்த 87 தோட்டம், 175 தோட்ட குடியிருப்புகளைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்காக இவ்வீடுகள் வழங்கப்பட்-டுள்ளன. எஞ்சிய வீடுகள் களனிவெளி புகையிரதப் பாதைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காரணத்-தினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு வழங்க-ப்படவுள்ளன. இரண்டு படுக்கையறைகளுடன் அனை-த்து வசதிகளையும் கொண்ட வீட்டு அலகொன்றின் நிர்மாணப்பணிகளுக்கு நான்கு மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 12 மாடிகளைக் கொண்ட வீட்டுக் கட்டிடத்தொகுதிக்கு செலவிடப்பட்டுள்ள மொத்தச் செலவு 15,840 இலட்சம் ரூபாவாகும். நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து வீட்டுத் திட்டத்தை மக்களிடம் கையளித்த ஜனாதிபதி, வீட்டுத்திட்டத்தைப் பார்வையிட்டார். 11 வீட்டு உரிமையாளர்களுக்கு ஜனாதிபதி வீட்டுத் திறப்புகளை வழங்கிவைத்தார். அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## குறைந்த விலையில் அரிசியை விநியோகிக்க நடவடிக்கை



வாழ்க்கைச் செலவு தொடர்பான பேச்சு வார்த்தை அமைச்சரவையில் இடம்பெற்றது. இதன்போது எடுக்கப்-பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ச.தொ.ச நிறுவனத்தின் தலைவர் பீ.எம்.கே.பீ. தென்னகோன் தெரிவித்தார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கூறுகையில், இலங்கையில் தற்போது போதுமானளவு அரிசி களஞ்சியப்படுத்தப்பட்-டுள்ளது. அவற்றோடு ச.தொ.ச நிறுவனத்திலுள்ள அரிசியையும் சேர்த்து 20 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி எம்மிடம் காணப்படுகின்றது. அவற்றை நாடு பூராகவுமுள்ள ச.தொ.ச விற்பனை நிலையங்களுக்கு பகிர்ந்தளித்து அவற்றை மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ச.தொ.ச விற்பனை நிலையங்களில் நாட்டரிசியை கிலோ 72 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் சுப்பர் மார்கெட்களிலும் இதே விலையில் அரிசியைப் பெற்றுக்கொள்ள முடியும். இதேவேளை 5 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது. நாட்டரிசி வகை தற்போது போதுமானளவு காணப்படு-கின்றது. அவற்றோடு சிவப்பரிசி மற்றும் சம்பா என்பனவும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

தொடர்ச்சி பக்கம் 26இல்

பக்கம் 25இன் தொடர்ச்சி .

தற்போது நாட்டில் 370 ச.தொ.ச. விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றோடு இன்னும் 30 நிலையங்கள் இணையவுள்ளன. அவற்றுக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளோம். ச.தொ.ச. நிலையங்களின் எண்ணிக்கையை 500 வரையில் அதிகரிப்பதே எமது நோக்கமாகும். இதன் மூலம் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை குறைந்த விலையில் விநியோகிக்கக் கூடியதாக இருக்கும்.

ச.தொ.ச. நிலையங்களின் எண்ணிக்கையை 500 வரையில் அதிகரிப்பதே எமது நோக்கமாகும். இதன் மூலம் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை குறைந்த விலையில் விநியோகிக்கக் கூடியதாக இருக்கும். மேலும் சில்லறை வியாபாரிகள் அருகிலுள்ள ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் தங்களை பதிவு செய்து மொத்தமாக பொருட்களை கொள்வனவு செய்து கொள்ளவும் முடியும். அத்தோடு எதிர்வரும் காலங்களில் சீனி, நெத்தலி, வெங்காயம், செமன் போன்றவற்றையும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த காலங்களில் அசாதாரண காலநிலை மற்றும் போக்குவரத்து சிக்கல் காரணமாகவே அரிசி தட்டுப்பாடு காணப்பட்டது. இதனாலேயே அரிசியின் விலையும் அதிகரித்திருந்தது. தற்போது இப் பிரச்சினைக்கு மேற்கண்டவாறு தீர்வு காணப்பட்டுள்ளது.

## கல்விச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்ய புதிய திட்டங்கள்: பிரதியமைச்சர் வே. இராதாகிருஸ்ணன்



மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் வகையில், அடுத்து கல்வியாண்டில் குறிப்பிட்ட சில மாற்றங்களைச் செய்யவுள்ளதாக பிரதி கல்வியமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். இசுறுபாயவில் தற்போது நடைபெற்று வரும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டின் அனைத்துப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிலும், தேவைக்கேற்ப பல மாற்றங்களைச் செய்வதற்கு கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது. அதன்படி, வடக்கு, கிழக்கு மாகாண மற்றும் தோட்டப் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புதிய கொள்கைகள், வேலைத்திட்டங்கள், செயற்றிட்ட ஆக்கங்கள், பின்னூட்டல்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பன நடத்தப்படவுள்ளன.

சர்வதேசப் பாடசாலைகளின் நடவடிக்கைகள், தேசியப் பாடசாலைகளின் கல்விக் கொள்கைகளுக்கு அமைவாக இருப்பதையும் கல்வியமைச்சு உறுதி செய்யவுள்ளதுடன், அது குறித்து தொடர் மேற்பார்வை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், விசேட தேவையுடைய மாணவர்களின் வசதி குறித்தும் கவனம் எடுக்கப்படவுள்ளது. நாடெங்கும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் விசேட தேவையுடைய மாணவர்கள், அவர்களது கல்வியைத் தடையின்றிப் பெற்றுக்கொள்வது உறுதிசெய்யப்படவுள்ளது.

நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளில் தேசிய மற்றும் இணைப்பு மொழிக் கல்வியை மேம்படுத்தும் நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன. தமிழ் மொழி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் வேலைத் திட்டங்களும் தொடர் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படவிருக்கின்றன. இவையனைத்தும், கல்வியமைச்சு மற்றும் கல்வி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மேற்படி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு பிரதியமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

## நிதி மோசடி, இலஞ்ச ஊழல் குறித்து விசாரிக்க விசேட மேல் நீதிமன்றம்



ஊழல் மோசடிகள் மற்றும் நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக விசேட மேல்நீதிமன்றம் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மூன்று நீதிபதிகளைக் கொண்ட மூன்று தீர்ப்பாயங்கள் இதற்கிணங்க அமைக்கப்படவுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது விசேட மேல் நீதிமன்றங்களை அமைப்பதற்காக பிரேரணையினை நீதியமைச்சர் தலதா அத்துக்கோரள முன்வைத்தார். இந்த பிரேரணை தொடர்பில் ஆராயப்பட்டதுடன் இதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கியது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள், மற்றும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லையென்று

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் அந்த விடயங்கள் குறித்து விசாரிக்க விசேட மேல்நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அமைச்சரவை தற்போது அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கான பிரேரணையினை நேற்று அமைச்சரவையில் நீதி அமைச்சர் தலாதா அத்துக்கோரள சமர்ப்பித்ததுடன் இதற்கு சகல அமைச்சர்களும் ஆதரவு வழங்கினர். நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் மற்றும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள், பொது சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை, பயங்கரவாதத்திற்கு பணம் வழங்க முற்பட்டமை, பணத்தினை பதுக்க முற்பட்டமை, நிதி தொடர்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட தவறினை மேற்கொண்டமை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து துரிதமாக விசாரணை நடத்துவதற்காகவே இந்த விசேட மேல்நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதாக பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சாதாரண மேல் நீதிமன்றங்களில் இடம்பெற்று வரும் நிதி மோசடிக்குற்றச்சாட்டுக்கள், மற்றும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழங்குகளை பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் ஆகியோரின் கோரிக்கைக்கு இணங்க விசேட மேல் நீதிமன்றங்களுக்கு மாற்ற முடியும் என்றும் இந்த விசேட நீதிமன்றங்களை அமைப்பதற்கான சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டுமென்றும் நீதி அமைச்சர் தலா அத்துக்கோரளையினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில் கோரப்பட்டிருந்தது. இத்தகைய சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த விசேட மேல் நீதிமன்றங்களினால் அளிக்கப்படும் தீர்ப்புக்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## OPPOSITION LEADER HAILS BUDGET 2018



Opposition Leader R. Sampanthan commended the Budget stating that it included proposals beneficial to all people including the Tamils, while TNA MP Sumanthiran speaking on the same line said their proposals too have been accommodated in the Budget. They stressed the need to implement the budgetary proposals in full.

The maiden Budget speech of Finance and Mass Media Minister Mangala Samaraweera was commended by many Parliamentarians in the Government benches as encouraging and forward looking, while the Joint Opposition and JVP members hardly had any positive comments to make to the media on the Budget 2018. The Parliamentarians when they left the chamber after listening to two and half hours long Budget speech, expressed mixed feelings over the budgetary proposals for next year. Many Parliamentarians, however, praised the move to reduce the prices of hybrid and electric vehicles.


Leader of the House and Minister of Higher Education and Highways Lakshman Kiriella congratulated Minister Samaraweera for presenting a progressive and well-planned Budget despite the country being riddled with a massive debt burden. Chief Government Whip and Lands and Parliamentary Reforms Minister Gayantha Karunathilake was confident that the maiden Budget of Minister Samaraweera would usher in a good future to the country. SLFP General Secretary and Minister of Agriculture Duminda Dissanayake said the Budget would lay a solid foundation to the country's economy. He added that the Budget that encompasses the proposals two major parties gives a hope for a better future.

UPFA General Secretary and Fisheries and State Minister of Mahaweli Development Minister Mahinda Amaraweera speaking on the same page with Duminda Dissanayake said the Budget has also proposed a host of relief measures and concessions to the needy sectors. He highlighted the special measures taken by the Government to bring down the Cost of Living of the people. Regional Development Minister Field Marshal Sarath Fonseka said the Budget that concentrates on Green Economy has taken special interest on conserving the environment and preventing environmental pollution. He commended the tax reduction of small cars and the incentives given to young entrepreneurs.

Policy Planning and Economic Development Deputy Minister Dr. Harsha de Silva said the Budget 2018 would drive the country towards a knowledge based highly competitive social market economy. Chief Opposition Whip Anura Dissanayake objected to the Budget on the grounds that it follows the principles of open economy that have been proven unsuccessful. He said the Government would further burden the already debt-ridden economy with more loans. Former President Mahinda Rajapaksa termed the Budget as useless stating that most of the budgetary proposals of the previous year are also yet to be implemented. "These proposals look good for the paper, but they are hardly implemented in reality," he commented.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் சோர்வை போக்கும் எலுமிச்சை



நமக்கு அருகில், எளிதில் கிடைக்கும் மூலிகைகள், கடைச்சரக்குகள், இல்லத்தில் அஞ்சறை பெட்டியில் உள்ள உணவுப் பொருட்களை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத பயனுள்ள எளிய மருத்துவத்தை பார்த்து வருகிறோம். அந்தவகையில், மூட்டுவலியை குணப்படுத்த கூடியதும், உடல் சோர்வை போக்க கூடியதும், குமட்டல், வாந்தியை நிறுத்தவல்லதுமான எலுமிச்சையின் நன்மைகள் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் காணலாம். ராஜகனி என்று அழைக்கப்படுவது எலுமிச்சை. இதில், பொட்டாசியம் சத்து அதிகளவில் உள்ளது. சோர்வை போக்குகிறது. மனதுக்கு இதத்தையும், உடலுக்கு பலத்தையும் தருகிறது. உப்புசத்தை வெளித்தள்ளும் தன்மை கொண்டது. சிறுநீரக கற்களை கரைக்கும். இதயத்துக்கு பலம் தரும். ரத்த அழுத்தத்தை சீராக்குகிறது. கிருமி நாசினியாக விளங்குகிறது.

எலுமிச்சையை கொண்டு மூட்டுவலியை போக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: எலுமிச்சை, மிளகுப்பொடி, மஞ்சள் பொடி, தேன். செய்முறை: ஒரு பாத்திரத்தில் நீர்விடவும். இதில், சிறிது மிளகுப்பொடி, கால் ஸ்பூன் மஞ்சள் பொடி சேர்த்து கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டிய பின் தேன், ஒரு ஸ்பூன் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து குடித்துவர மூட்டுவலி சரியாகும். உடல் வலி நீங்கும். எலும்பு தேய்ந்த நிலையில் ஏற்படும் வலியை போக்கும் பானமாக இது விளங்குகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி உடைய எலுமிச்சையை பயன்படுத்தி வாந்தி, குமட்டலை போக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: எலுமிச்சை, தேன், சீரகம்.செய்முறை: ஒரு பாத்திரத்தில் 2 ஸ்பூன் தேன் விடவும். இதனுடன் அரை ஸ்பூன் சீரகம் சேர்த்து பொறிக்கவும். பின்னர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து குடித்துவர வாந்தி, குமட்டல் பிரச்னை சரியாகும். எலுமிச்சையை மேல் பூச்சாக பயன்படுத்தும்போது தோல்நோய்களை குணமாகும். ரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை கொண்ட எலுமிச்சை நல்ல மணத்தை தருவதாக அமைகிறது. பித்த சமனியாக விளங்குகிறது. உடல் சோர்வை நீக்கி புத்துணர்வை தரும். ரத்தக் கசிவை தடுக்கிறது.

எலுமிச்சை இலைகளை பயன்படுத்தி பசியை தூண்டும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: எலுமிச்சை இலை, தோல், .மஞ்சள் பொடி, சீரகம், பனங்கற்கண்டு.செய்முறை: ஒரு பாத்திரத்தில் நீர்விடவும். இதனுடன், பொடியாக நறுக்கிய எலுமிச்சை தோல், பொடி செய்த எலுமிச்சை இலை, பனங்கற்கண்டு, மஞ்சள் பொடி, சீரகம் சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டவும். இதை குடித்துவர பசியை தூண்டும். பித்தத்தை சரிசெய்கிறது.பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட எலுமிச்சை ஈரலை பலப்படுத்தும். இதன் இலைகள் பித்த சமனியாகிறது. எலுமிச்சை கனியை சுவைப்பதால் வாய் துர்நாற்றம் போகும். ஈறுகளில் இருந்து வெளியேறும் ரத்தத்தை நிறுத்தும். எலுமிச்சை சிறந்த மருந்தாகி பயன் தருகிறது.ரத்த மூலத்தை சரிசெய்யும் எளிய மருத்துவம் குறித்து பார்க்கலாம். தேவையான பொருட்கள்: கருப்பு எள், பசு வெண்ணெய். செய்முறை: கருப்பு எள்ளை பொடியாக்கி அரை ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதை பசு வெண்ணெயில் குழைத்து தினமும் வெறும் வயிற்றில் சா்ப்பிட்டுவர் ரத்தமூலம் வெகு விரைவில் குணமாகும்.

## எடையை குறைக்க வேண்டுமா? மரபணுக்களிடம் கேளுங்கள்


21-ம் நூற்றாண்டின் மிகப் பெரிய சுகாதார அச்சுறுத்தலாக உள்ளது உடல்பருமன். கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலும் ஒரு சுமையாகவே உருவெடுத்திருக்கிறது. உடல்ரீதியான ஒரு தனிப்பட்ட சிக்கலாக மட்டுமல்லாமல் வேறு சில பிரச்னைகளை (Co-morbidities) அதிகரிக்கவும் பருமன் காரணமாகிறது என்பது கவலைக்குரிய செய்தி. நீரிழிவு, இதய நோய்கள், உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய்களையும் மற்றும் சிலவகை புற்றுநோய்களை வரவழைக்கக்கூடிய காரணியாக விஸ்வரூபமெடுத்திருக்கிறது பருமன். மாறி வரும் நம்முடைய வாழ்க்கை முறையானது உடல் பருமனை அதிகரிப்பதுடன், Obesogenic சூழலையும் உருவாக்கியுள்ளது.

சமீபத்திய ஆய்வுகளில், BMI (Body Mass Index)-ன் மாறுபாட்டுக்கும், நம்முடைய மரபணுவுக்கும் உள்ள தொடர்பு நிரூபிக்கப்பட்டுள்ளது. நம்முடைய மரபணுக்களைப் பற்றி தெரிந்துகொள்வதன் மூலம், எவ்வகையான உணவை உட்கொண்டால், உடல் எடையைக் கட்டுப்படுத்தலாம் என்பதை அறிந்துகொள்வதற்கும், மூலக்கூறு நெறிமுறைகளை சீர் செய்வதன் முறையை தெரிந்துகொள்வதற்கும் மரபணு அணுகுமுறைகள் வழிவகுக்கின்றன. ஒல்லியான மற்றும் பருமனான தனி நபர்களுக்கிடையே மரபணுக்கள் வேறுபடுவது எப்படி என்பதை புரிந்து கொள்ளஇந்த மரபணு ஆய்வு உதவுகிறது.

குறிப்பாக, மூளைக்குள் இருக்கும் பல வழிகள், உணவு உட்கொள்ளல் மற்றும் உணவு கட்டுப்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை கடந்த 20 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மரபியல் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. நம்முடைய மூளைப்பகுதியில் அமைந்திருக்கும் லெப்டின் - மெலனோகோர்டின் Signaling pathway நம்முடைய பசி மற்றும் நிறைவுத் தன்மைக்கு வழிவகுக்கிறது.

இந்த அமைப்பை MC4R, LEP போன்ற மரபணுக்கள் கட்டுப்படுத்துகிறது. ஆகையால், உங்கள் மரபணுக்களை தெரிந்துகொள்வதன் மூலம் நீங்கள் அதற்கேற்றவாறு உணவு உட்கொண்டால், உங்கள் பசித்தன்மையை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும்.

LEP GENE, LEPTIN ஹார்மோன் எவ்விதம் நம் எடையைக் கட்டுப்படுத்துகிறது என்றும் தெரிந்துகொள்வோம். லெப்டின் என்பது கொழுப்பு செல்களில் செய்யப்படும் ஒரு புரதம். இது ரத்த ஓட்டத்தின் மூலம் மூளைக்குச் செல்கிறது. லெப்டின் என்பது, உங்கள் கொழுப்பு செல்களில் போதுமான அளவு ஆற்றல் சரியாக இருக்கிறது என்று மூளைக்கு சொல்லும் ஒரு Messenger என்றும் புரிந்துகொள்ளலாம். இவ்வாறு சொல்லும்போது நாம் சரியான உணவு உண்டவுடன், நிறைவடைவதற்கான சமிக்ஞையை அனுப்புகிறது. ஆனால், ஒவ்வொருவடைய Leptin அளவும் மரபணு வித்தியாசங்களால் மாறுபடுகிறது.



உங்களில் பலருக்கு இந்த கேள்வி வரலாம். Leptin ஒரு தெர்மோஸ்டார்ட் போல் வேலை செய்தால் நாம் எடை கூடுவது ஏன்? அதிக எடை கொண்டவர்களுக்கு லெப்டின் அதிகமாக இருக்கும், ஆனால், சாப்பிடுவதை நிறுத்துவதற்கான முக்கிய சிக்னலை அவர்களுடைய மூளை பெறுவதில்லை. இதை லெப்டின் எதிர்ப்பு (Leptin Resistance) என்று கூறுகிறோம். லெப்டின் எதிர்ப்பு என்பது. பொதுவாக, உணவு அதிகம் உட்கொள்வதை லெப்டின் ஹார்மோன் தடுத்து நிறுத்த வேண்டும். ஆனால், நிறுத்தாத நிலையினாலேயே உணவு அதிகம் உட்கொள்கிறோம். இதுவே கொழுப்பாக சேமிக்கப்படுகிறது.

இந்த அதிக கொழுப்பு செல்களிலிருந்து Leptin உருவானாலும் செயல்படுவதில்லை. இந்த Leptin resistance காரணமாக உணவு உட்கொள்வதை கட்டுப்படுத்த முடிவதில்லை. அதனால், உடல் எடை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதுவே உடல்பருமனுக்கு முக்கிய காரணமாக அமைகிறது. லெப்டின் அளவை மேம்படுத்துவதற்கான உணவுகள் ஒமேகா-3 உள்ள மீன்கள், ஓட்ஸ், தயிர், க்ரீன் டீ, பாதாம், ப்ரோக்கோலி, முட்டை, பழங்கள் - தர்பூசணி, பெர்ரி வகைகள், ஆப்பிள், திராட்சை, பால், மஞ்சள், எள், சுருள்பாசி போன்றவை Leptin sensitivity-ஐ மேம்படுத்த உதவும்.

Leptin Gene போல் 300-க்கும் மேற்பட்ட ,மரபணுக்கள் நம் உடல் எடையை பராமரிப்பதில் முக்கியப் பங்கு வகுக்கின்றன. நம்முடைய தாத்தா பாட்டி காலத்தில் இந்த உடல் பருமன் பிரச்னை இந்த அளவுக்கு இல்லையே! மிகக் குறைவாகவே காணப்பட்டது ஏன்? நம்முடைய உணவு முறைகள், வாழ்க்கை முறை மாற்றத்தின் காரணமாக, மரபணுக்களின் செயல்பாடுகளும் மாறத் ,தொடங்கிவிட்டன. அப்படியா! உணவு பற்றாக்குறையை சமாளிக்கும் விதத்தில் நம் உடல் ஒரு செயல்பாட்டை உருவாக்கியுள்ளது. உணவு ஏராளமாக இருக்கும்போது அதிக உணவை சாப்பிடுகிறோம். கூடுதல் கலோரிகள் கொழுப்பு வடிவத்தில் ஆற்றல் இருப்பாக சேமிக்கப்படுகின்றன.

உணவு குறைவாக இருக்கும்போது குறைவாக சாப்பிடுகிறோம். நமது உடல், உயிரைக் காப்பாற்ற ஆற்றலுக்காக சேகரிக்கப்பட்ட கொழுப்பை எரிக்க ஆரம்பிக்கின்றன. இந்த கொழுப்பு சேமிப்பு மற்றும் அணி திரட்டல் செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள Thrifty Genes அல்லது சிக்கனமான மரபணுக்கள் என சுமார் 200 மரபணுக்கள் உள்ளன. இந்த மரபணுக்கள் முன்னர் உணவுப் பற்றாக்குறை பிரச்னைகளை சந்திக்க உதவுவதில் பரிணாம வளர்ச்சியாக இருந்தன. இருப்பினும் நவீன காலங்களில் அவை ஒரு சுமையாகி விட்டன.

இன்றைய காலக்கட்டத்தில் உணவு பற்றாக்குறை என்பது அரிதாக காணப்படும் விஷயமாக மாறிவிட்டது. நமக்கு அதிக அளவு உணவுகள் எளிதாக அணுகும் முறையில் இருக்கிறது.

ஆகையால், நாம் அதிக கொழுப்புகளை நம் உடலில் சேகரிக்கத் தொடங்கிவிட்டோம். இதன் விளைவாக பலர் அதிக எடை மற்றும் பருமனாக மாறியுள்ளனர். இது டைப் 2 நீரிழிவு நோய் அதிகரிக்க வழி வகுத்துள்ளது. அதிர்ஷ்டவசமாக, பின்வரும் ஊட்டச்சத்துக்கள் உங்கள் உடல்பருமனால் வரும் ஆபத்தைக் குறைக்க உதவி செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய செய்திகள்

### அரசியல் முகப்பு, செய்திகள், அரசியல் வரிவிதிப்பை இழக்க முடியாது அரசுக்கு வானில் இருந்தா பணம் கொட்டுகிறது?: அமைச்சர் ஜெயக்குமார் கேள்வி



எங்களுக்கென்ன வானில் இருந்தா பணம் கொட்டிக் கொண்டிருக்கிறது?. வரிகளில் வரும் வருமானத்தை வைத்துதான் எல்லாவற்றையும் செய்ய முடியும். எந்த காலத்திலும் வரிவிதிக்கும் உரிமையை இழக்க முடியாது என அமைச்சர் ஜெயக்குமார் கூறினார். கவுகாத்தியில் நடந்த ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் தமிழக நிதி அமைச்சர் ஜெயக்குமார் கலந்துகொண்டார். பின்னர் அவர் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு விமானம் மூலம் சென்னை திரும்பினார். அப்போது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் 266 பொருட்களின் வரி 28 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. 57 பொருட்கள் மீதான வரி 12, 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. சில பொருட்களுக்கு முழு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடக்கும் வருமான வரி சோதனைக்கும், தமிழக அரசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வருமான வரித்துறை உள்ளது. இதற்கு மாநில அரசை எப்படி குறைகூற முடியும்?. வருமானவரி துறை சோதனைக்கு மாநில அரசுதான் காரணம் என்று கூறுவது முழங்காலுக்கும், மொட்டை தலைக்கும் முடிச்சு போடுவது போல் உள்ளது. பெட்ரோலிய பொருட்களை ஜிஎஸ்டியில் கொண்டு வரக்கூடாது என்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. அப்படி கொண்டு வந்தால், மாநில அரசின் வருவாய்க்கு பெரும் இழப்பு ஏற்படும். உரிமையும் பறிக்கப்படும்.

தமிழகத்தை பொறுத்தவரையில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், விவசாயிகள் என பல தரப்பினருக்கும் பல்வேறு சலுகைகள், மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு மட்டுமே தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.77 ஆயிரம் கோடி நிதி தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், மாநிலத்துக்கு வரி இழப்பு ஏற்பட்டால் என்ன செய்ய முடியும்? எங்களுக்கென்ன பணம் வானில் இருந்தா கொட்டி கொண்டிருக்கிறது?. வரிகளில் வரும் வருமானத்தை வைத்துதான் இதையெல்லாம் செய்ய முடியும். எனவே எந்த காலத்திலும் வரிவிதிக்கும் உரிமையை இழக்க முடியாது என்றார்.

### சென்னையில் அளவுக்கு அதிகமாக காற்று மாசு : நித்யானந்தன், சுற்றுச்சூழல் ஆர்வலர்



சென்னையில் காற்றுமாசுபாடு இருக்கத்தான் செய்கிறது. டெல்லியில் நிலவுவதை போன்று மோசமான நிலை வந்தால் தான் நடவடிக்கை எடுப்பார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. கொடுங்கையூர் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு நாங்கள் ஆய்வுக்கு சென்றபோது மாசு அளவு 130 மைக்ரோ கிராம் ஆக காட்டியது. பாதுகாப்பு அளவு 60 மைக்ரோ கிராம்தான். இதை வைத்து பார்க்கும்போது இரண்டு மடங்கு மாசு உள்ளது. நாம் வாழ்ந்து கொண்டிக்கும் இடத்தில் இந்த காற்றை சுவாசிப்பதால் ஆயுள் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகரம் டெல்லி போன்ற நகரம் கிடையாது. காரணம் இங்கு கடல் உள்ளது. அதையும் மீறி இங்கு காற்று மாசு அளவு 130, 200 என்று உள்ளது. தீபாவளி நேரத்தில் காற்று மாசு அதிகரித்தது. காற்று மாசு ஏற்படுவதற்கான காரணத்தை கண்டறிந்து முதலில் அவற்றை சரி செய்ய வேண்டும். சென்னை நகரத்தில் காற்று மாசு வெவ்வெறு இடங்களில், வெவ்வேறு காரணங்களால் அதிகரிக்கிறது. கட்டிடங்கள் கட்டும்போது, அதில் வரும் மாசு, வாகனம் ஓட்டி வருவதில் இருந்து வரும் மாசு, குப்பை எரிப்பதாலும், நிலக்கரி பயன்படுத்துவதாலும் மாசு ஏற்படுகிறது.

வட சென்னை பகுதியில் மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் எப்போதும் புகைந்து கொண்டே இருக்கும். அதில் இருந்து வரும் மாசு காற்று தெற்கு நோக்கி அடிக்கும்போது சென்னை நகரில் காற்று மாசு பரவுகிறது. வடக்கு நோக்கி அடித்தால் திருவள்ளூரில் மாசு ஏற்படுகிறது. ஆனால், அந்த இடங்களில் இயந்திரங்கள் வைக்காததால் எந்த அளவு மாசு ஏற்படுகிறது என்பது தெரியவில்லை. மேலும், அந்த பகுதியில் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் வரும் புகையால் மாசு ஏற்படுகிறது. சென்னையில் பொது போக்குவரத்து கட்டமைப்பை அரசு உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால், அதை அரசு ஏற்படுத்தாததால், காரின் எண்ணிக்கையும், தனியார் வாகன எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அதனால் காற்றுமாசுபாடு ஏற்படுகிறது. மேலும், போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணப்படாததால் ஒரே இடத்தில் வாகனங்கள் நின்றுகொண்டு புகை கக்குவதால் மாசு ஏற்படுகிறது. அனல் மின் நிலையத்தில் காற்று மாசை கட்டுபடுத்த மாசு தடுப்பு இயந்திரம் பயன்படுத்த வேண்டும். அதை செய்ய மின்சார வாரியம் தயாராகவில்லை.

மின்சார வாரியத்திற்கு செலவு ஏற்படும் என நினைத்து வாங்காததால் பொதுமக்கள் சுகாதார சீர்கேட்டால் பாதிக்கப்படுகின்றனர். இனிமேல் புதிதாக மின்சாரம் தயாரிக்க வேண்டுமென்றால் நிலக்கரியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதை தவிர்க்க வேண்டும். தனியார் வாகனங்களை தவிர்த்து மறு போக்குவரத்திற்கான கட்டமைப்புக்கு செலவு செய்ய வேண்டும். கட்டிடங்களில் இருந்து வரும் மாசை தடுக்க பாதுகாப்பு வழிமுறைகளை கையாள வேண்டும். இவ்வாறு செய்தால் காற்று மாசு குறையும். மேலும், ஒவ்வொரு இடத்திற்கு தகுந்த சூழ்நிலைக்கேற்ப தாவரங்கள், செடிகள், மரங்கள் வளர்க்க வேண்டும். உதாரணமாக புங்க மரம், வேப்ப மரம், மாமரம், அரச மரம், பூவரச மரம், புளிய மரம், முருங்கை மரம், பனை மரம் உள்ளிட்ட மர வகைகளை வளர்க்கலாம். இடத்திற்கு தகுந்தாற் போல் புல்வகைகளை போட்டால் தூசியும் கிளம்பாது.

### இந்தியாமுகப்பு , செய்திகள், இந்தியாமுன்னாள் முதல்வர் குமாரசாமி புதுகுண்டு: சித்தராமையா அணிந்துள்ள செருப்பு விலை ரூ.70 ஆயிரம்



"கர்நாடக முதல்வர் சித்தராமையா அணிந்துள்ள செருப்பு ரூ.70 ஆயிரம் விலை கொண்டது" என்று முன்னாள் முதல்வர் குமாரசாமி புதுகுண்டு வீசியுள்ளார். கர்நாடாகவில் முதல்வர் சித்தராமையா தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. இவர் ரூ.70 லட்சம் மதிப்புள்ள வைரகல் பதித்த ஹப்லட் என்ற வகையை சேர்ந்த கைகடிகாரத்தை அணிந்திருப்பதாக மஜத மாநில தலைவரும், இம்மாநில முன்னாள் முதல்வருமான குமாரசாமி கடந்தாண்டு குற்றம்சாட்டினார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதேபோல், கபடமும், பாசாங்கும் செய்யும் சித்தராமையா, ரூ.70 ஆயிரம் மதிப்புள்ள செருப்புகளை அணிந்துள்ளார் என்ற புதிய குற்றச்சாட்டை நேற்று அவர் கூறியுள்ளார். இம்மாநிலத்தில் அடுத்தாண்டு சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ளது. இதற்காக, குமாரசாமி இப்போதே கிராமம் கிராமமாக சென்று தங்கி பிரசாரம் செய்து வருகிறார். இதை சமீபத்தில் விமர்சித்த சித்தராமையா, கிராமங்களில் தங்குகிறேன் என்ற பெயரில் ஆதரவாளர்கள் செய்து தரும் சகல வசதிகளையும் குமாரசாமி அனுபவித்து வருகிறார் என்று குற்றம்சாட்டினார். இதற்கு நேற்று பதிலடி கொடுத்த குமாரசாமி, அரசு போக்குவரத்து துறையின் உதவியுடன் செக்போஸ்ட்களில் ரவுடிகளை நிறுத்தி, லொரிகளிடம் தினமும் மாமூல் வசூலிக்கப்படுகிறது. இதுவரை ரூ.200 கோடி வரை வசூலிக்கப்பட்டுள்ளது. ஒரு செக்போஸ்டில் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ரூ.35 லட்சம் வசூல் செய்யப்படுகிறது. இந்த ஒட்டு மொத்த ஊழல் ரூ.1000 கோடியை தொடும். எளிமையான முதல்வர் என்று கூறிக்கொள்ளும் சித்தராமையா, தனது காலில் ரூ.70 ஆயிரம் மதிப்புள்ள செருப்பை அணிந்துள்ளார் என்றார். குமாரசாமியின் இந்த குற்றச்சாட்டு, கர்நாடக அரசியல் வட்டாரத்தில் பெரிய சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

### அரசுத் துறை கட்டுமானங்களை 'ஆய்வு செய்யும் அதிகாரிகளை'கவனிக்க' அரசு திடீர் தடை




அரசுத்துறை கட்டுமான பணிகளை ஆய்வு செய்யும் அதிகாரிகளுக்கு போக்குவரத்து வசதி, தங்கும் வசதி, சாப்பாடு உள்ளிட்ட கவனிப்புகளை செய்யக் கூடாது என்று மத்திய அமைச்சகங்களுக்கு நிதித்துறை சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. மத்திய அரசுத்துறைகளில் பலவிதமான கட்டுமானங்கள், வளர்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த கட்டுமானங்களுக்கு தேவையான பொருட்களை பல சப்ளையர்களும், வியாபாரிகளும் அளிக்கின்றனர். அதுவும் ரயில்வே துறைக்கு பொருட்களை சப்ளை செய்யும் சப்ளையர்கள் மற்றும் வியாபாரிகள் அதிகளவில் உள்ளனர். இந்த கட்டுமான மற்றும் வளர்ச்சி திட்டங்களில், தரமான பொருட்கள் சப்ளை செய்யப்படுகிறதா, எல்லா பணிகளும் சரியான முறையில் நடக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்காக அந்த துறையின் மேலதிகாரிகள் செல்வர். அவர்கள் வரும்போது அவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் விருந்தோமல் செலவுகளை சப்ளையர்களும், வியாபாரிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நடைமுறை உள்ளது. இதையடுத்து, மத்திய அமைச்சகங்களின் செயலாளர்கள் மற்றும் நிதி ஆலோசகர்களுக்கு நிதித்துறை அமைச்சகம் கடந்த அக்டோபர் 24ம் தேதி ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. அதில், ஆய்வு பணிக்கு வரும் அதிகாரிகளுக்கு, சப்ளையர்கள் செலவு செய்வது கவனத்துக்கு வந்துள்ளது. இந்த நடைமுறை ஆய்வுக் குழுக்களை சுதந்திரமாக செயல்பட வைக்காது. ஒப்பந்தத்தில் உள்ள இந்த பிரிவை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் ஆய்வு பணியில் எந்தவித சமரசத்துக்கும் இடமிருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## யாழ். ஹாட்லி மாணவன் மிதுன்ராஜ் புதிய சாதனை



ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான சேர் ஜோன் டாபட் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளின் இரண்டாம் நாளான இன்றைய தினம் ஹாட்லி மாணவன் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் நிகழ்ச்சியில் புதிய சாதனை நிலைநாட்டியுள்ளார்.

இவர் தட்டெறிதல் போட்டியில் 53.23 மீற்றர் தூரம் எறிந்தே இந்த புதிய சாதனையை நிலைநாட்டினார். முன்னைய சாதனையைவிட இது 7 மீற்றர் அதிகமானதாகும். இதே போட்டியில் இவரது கல்லூரியைச் சேர்ந்த பிரேமகுமார் மிதுஷான் 43.43 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்து வெண்கலப் பதக்கத்தை வென்றார். புதனன்று நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் (13.41 மீற்றர்) வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார். இதேவேளை கடந்த புதன்கிழமை ஆரம்பமான இப் போட்டிகளில் நேற்று பிற்பகல் 3.00 மணிவரை 14 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. முதலாம் நாளன்று 3 புதிய சாதனைகளும் நேற்றைய தினம் 11 சாதனைகளும் நிலைநாட்டப்பட்டன. நாளை போட்டியின் கடைசி நாளாகும்.

## இலங்கைத் தலைமைப் பயிற்சியாளராக சந்திக்க வருவார் போலும்



இலங்கைக் கிரிக்கெட் அணியை தூக்கி நிறுத்தும் பொறுப்பை சந்திக்க ஹத்துருசிங்க ஏற்றுக்கொள்வார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த கிரஹம் போர்ட், அண்மையில் இராஜினாமா செய்து சொந்த நாட்டுக்கு திரும்பினார். இந்நிலையில் இலங்கை அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக செயற்பட்டு வந்த நிக் போதஸ் இடைக்கால தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

தற்போது இலங்கை அணி கடும் பின்னடைவை சந்தித்து வரும் நிலையில் தலைமைப் பயிற்சியாளர் ஒருவரை இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் தேடிக்கொண்டிருந்தது. இந்நிலையில் தலைமைப் பயிற்சிப் பொறுப்பை ஏற்க அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர்கள் இருவர் விருப்பம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. அந்தப் பட்டியலில் இந்தியாவின் முன்னாள் பயிற்சியாளர் அனில் கும்ப்ளேயும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் பங்களாதேஷ் அணியின் வீரிய வளர்ச்சிக்கு காரணமான இலங்கை அணியின் முன்னாள் வீரரான ஹத்துருசிங்க பயிற்சியாளராக வருவதையே அனைவரும் விரும்பினர். அந்தவகையில் தற்போது சந்திக்க ஹத்துருசிங்க இலங் கைக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பங்களாதேஷின் தலைமைப் பயிற்சியாளராக உள்ள அவர் அந்தப் பதவியிலிருந்து விலகுவதற்கான இராஜினாமா கடிதத்தை கொடுத்துவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், அடுத்து இலங்கை அணியை மீட்டெடுக்கும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஓட்டமேதும் கொடுக்காமல் 10 பேரையும் வீழ்த்திய சிறுவன்



இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட்டில் எதிர் அணிக்கு ஓட்டமேதும் கொடுக்காமல் 10 விக்கெட்டுக்களையும் ஒரு சிறுவன் வீழ்த்தியது அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் பாவர் சிங் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் கிரிக்கெட் அகாடமியைச் சேர்ந்த இரு அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய திஷா கிரிக்கெட் அகாடமி அணி 20 ஓவர்களில் 156 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய பியர்ல் அகாடமி அணி 36 ஓட்டங்களுக்கு சுருண்டது. திஷா அணியின் வீரரான ஆகாஷ் சவுத்ரி ஓட்டமேதும் விட்டுக்கொடுக்காமல் 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி சாதனை படைத்தார். ஆகாஷ் தனது முதல் மூன்று ஓவர்களில் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கடைசி ஓவரில் ஹெட்ரிக் விக்கெட்டுடன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார். மொத்தமாக தான் வீசிய 4 ஓவர்களில் எதிர் அணிக்கு எந்த ஓட்டமும் விட்டுக்கொடுக்காமல் 10 விக்கெட்டுக்களையும் மொத்தமாக அள்ளினார். ஆகாஷின் அதிரடியான ஆட்டம் அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ST JOSEPH'S, JANADHIPATHI BV EMERGE OVERALL CHAMPIONS



St. Joseph's College, Colombo and Janadhipathi Balika Vidyalaya, Nawala clinched the boys and girls overall championship respectively with 62 points each at the 48th John Tarbet Junior Athletic Championship 2017 which concluded at Mahinda Rajapaksa Stadium, Diyagama yesterday. Rahula College, Matara and Maris Stella College, Negombo secured second and third places with 48 and 47 points respectively in the boys overall championship. In the girls' championship Sumana Balika Vidyalaya, Ratnapura was placed second with 47 points and Ave Maria Convent, Negombo ended up third with 42 points. Sadini Kaveesha of Vijitha Central College, Dickwella bagged the girls Best Junior Athlete award with a leap of 5.47 metres in the under 15 long jump event and also clinched the Best Junior Long Jumper's award. W.H.H.M. Abeysekara of Siddartha MMV, Balapitiya won the Best Junior Athlete award by winning boys under 15 long jump event with a leap of 6.52 metres.

A total of 21 new meet records were established by the junior athletes including ten new meet records yesterday. H.S. Malawanna of Mahinda College, Galle and K.B. Abeywardana of Ananda Sastralaya National School, Godagama set up new meet records in the 100m and 400m boys under 15 events with a timing of 11.1 and 51.1 seconds respectively. Long Jumper W.H.H.M. Abeysekara of Siddhartha MMV, Balapitiya created a new record in boys under 15 category while Udil Vidsarith of Dharmapala Vidyalaya, Pannipitiya set up a new meet record in boys under 14 high jump event with a leap of 1.75 metres. Under 14 400m runner R.S. Jayasundara of Sir John Kotelawala MV, Kurunegala established a record with a timing of 55.1 seconds. The Josephians team established a new meet record in 4x100m relay event in under 15 cetegory with a timing of 46.3 seconds. Sir John Kotelawala MV, Kurunegala and Holy Cross College, Kalutara sets up two new records in boys under 14 and 12, 4x100m events clocking in 47.9 and 55.1 seconds respectively.

Another two new meet records were created by junior girls in under 15 400m and under 13 100m events by K.S. Edirisinghe and Ruwansa Weerakkody both from Janadhipathi BV, Nawala with a timing of 59.1 and 13.00 seconds respectively. Ruwansa also set up another two meet records in 200m and long jump events on Thursday. Marketing Manager of CBL Foods International (Pvt) Ltd., Nilupul de Silva was the Chief Guest and gave away the awards.

## RUGBY RUMBLE - OLD BOYS TAG RUGBY CARNIVAL

It's time to get your gaming and party spirit on again as Rugby Rumble kicks off today. A thrilling and fun seven-a-side Tag Rugby Tournament that brings former college rugby stars to the pitch yet again, Rugby Rumble will combine the excitement of the great sport, with a carnival-like atmosphere that is topped off with sensational entertainment that brings several former rugby heroes to one place.

Held for the fourth consecutive year, the carnival will take place today from 8.30 am onwards at the Colombo Racecourse International Stadium. This year Rugby Rumble Tag Rugby tournament will consist of several teams vying for trophies and prize money, from leading rugby playing schools, namely D.S. Senanayake, Isipathana, Zahira, Lumbini, Royal, S. Thomas', St. Joseph's, Dharmaraja, Wesley, Kingswood, St. Benedict's, St. Anthony's and Science College. The teams will comprise members from different eras, while two female players will also be included to add some spice to the scrum. One mixed school team from Kandy and two overseas teams will also join in the battle. The overseas teams will be UMT University from Pakistan and Lanka Lions from Dubai. The teams will be packed with some of the renowned stars of yesteryear who represented college and club teams in Colombo and Kandy like Roger Rodrigo, Azarath Deen, Kevin Rasquino, Thushara Bandara, Harin Fernando, Shamin Perera, Dinuk Wijeratne, Dharshana Munasinghe, Nilufer Ibrahim, Nalaka Weerakkody, Alex Nishntha, Ifthikar Ahamed, Pavithra Fernando, Ravindra Vekadapola, Hiran Doranegama, Rohan Chinthaka, and Manoj Rambodavilage. Stepping away from the rugby action, the carnival will include a number of fun filled activities for the whole family. One of the highlights will be the kicks at goal.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LILI CHEESE WINS BEST ENTREPRENEUR AWARD



LILI Cheese was awarded the Best Enterprise Award in the Medium Category in Western Province Entrepreneur Awards - 2017.

The award ceremony was organizes by the National Chamber of Commerce of Sri Lanka & the National Entrepreneur Development Authority. LILI Cheese started as a micro enterprise in 2005 in Giriulla, North Western province, producing around 40 kilograms of cheese per month and in late 2006 developed into a social enterprise linking few women, started small dairy farming in the area. In 2006 LILI Cheese (www.lilidairy.com) was awarded by "Shell' as the best start up micro enterprise, and in 2008 won an international award as First Runner up in the international BID business proposal competition with 15,000 euro prize money which helped to expand its production capacities up to 500 kilograms per month and by year 2011 the production output was around 1,000 kilograms per month.

Being the pioneer farm house Mozzarella cheese producer in the country, currently produce around 4-5 metric tons of cheese verities including Mozzarella, Cheddar, Ricotta ,Paneer, American cheese, Processed cheese and no of Italian cheese types catering to the up market restaurant in the city and cooperate sector. Along with establishment of their new plant at Welihinda Road, Delatura, Jaela their consumer packs would be released to the market by December 2017 to cater the consumer needs.

## SRILANKAN WINS 'INNOVATION IN COMMERCIAL AIRLINE CABINS' AWARD




SriLankan Airlines added yet another prestigious award to its impressive list of recent global airline industry accolades when it won the 'Innovation in Commercial Airline Cabins' award at the In-flight Asia Pacific Awards in Singapore on 1st November.

Siva Ramachandra, SriLankan's Chief Commercial Officer, said: "We are delighted to win this award, which recognizes excellence in innovation of passenger cabins. This award is an extremely valuable one since the highlighted cabin / seat design was developed using our in house talents."

The nominated cabin design highly impressed the panel of judges comprised industry experts who are well versed with all of the aspects of aircraft cabins. The innovative features of SriLankan's cabins included A330-300 Business Class flat-bed seats, A330-300 Economy Class seat fabric design and bulkhead designs inspired by the natural beauty of Sri Lanka. The Sinharaja rain forest, a world heritage site in Sri Lanka is home to endemic and endangered flora and fauna which are woven into the Economy seat fabric design in shades of blue and aquamarine.

The cabin ambience is further enhanced with the mood lighting, recreating a beautiful tropical sunrise, flowing from the back of the cabin to the front to wake up before breakfast is served. For evening flights we emulate a typical Sri Lankan "fairy sky" sunsets which transcends to sleep with the sparkling of stars in the night sky creating a unique passenger experience.

The 'Innovation in Commercial Airline Cabins' award was one of just seven that were presented at the Inflight Workshop, an open forum for lively debates on key topical issues in the areas of inflight entertainment, cabin technology and aircraft interiors, in Singapore on 1-2 November within the Inflight Pavilion of the MRO Asia-Pacific exhibition hall.

SriLankan Airlines was also shortlisted as a finalist in two other categories - 'Inflight airline of the year' and 'Airline IFEC experience'. Other winners included Virgin Australia, Lufthansa Systems, Inmarsat, Singapore Airlines/Travelport Digital, Stellar Entertainment, and Spicejet/STG Aerospace.

The 'Innovation in Commercial Airline Cabins' award recognizes recent revolutionary developments in cabin interiors of commercial aircraft. The category was open to manufacturers, suppliers and airlines operating in the Asia-Pacific region. Shortlisted finalists for this award included Cobalt Aerospace, Saudia and STG Aerospace

In-flight Asia Pacific Awards are presented by HMG Aerospace, a leading publisher, event organiser and intelligence provider serving the international aerospace community. Last month, SriLankan Airlines received the prestigious Four Star Rating from the Airline Passenger Experience Association (APEX) in the first ever global airline industry rating programme based solely on passenger feedback.

A member of the prestigious oneworld global airline alliance, SriLankan operates a route network of 106 cities from its hub in Colombo, with a fleet of modern aircraft that feature flatbeds in Business Class and sophisticated in-flight entertainment, in addition to its world class service famed for caring and warmth.

SriLankanhas won a large number of awards in recent times including' Best Full Service Airline In Central And South Asia' for three consecutive years from 2015-17 at the Future Travel Experience Asia Awards in Singapore; 'Leading International Airline' and 'Best in Class' at the second annual South Asian Travel Awards 2017; 'World's Leading Airline Operating to the Indian Ocean Region' at the World Travel Awards; 'Best Full Service Airline in Central and South Asia' for the second consecutive year at the Future Travel Experience Asia Awards; 'Best International Airline - Asia' at the Tamil Nadu Tourism Awards; and 'Best Airline in South Asia' at China's Top Travel Awards.

## SR METALS RECEIVES SILVER AT NCE AWARDS



SR Metals a leading copper and aluminium manufacturers in Sri Lanka inheriting a long and proud history in the trade, was recently bestowed the silver award in industrial sector, heavy engineered products sub sector, large category at NCE Export Awards ceremony organized by the National Chamber of Exporters.

With several decades of track records in customer satisfaction and trust in business. Utilizing local raw materials and world class cutting edge technology in manufacturing high standard copper and aluminium products, the company has invested largely in its factories providing employment to a large number.

SR Metal stands tall as a major contributor in the export market that supports local manufacturing. With a humble sense of pride over the past achievements, S.F. Robinson, Proprietor, SR Metals, intends to increase his contribution towards building the country's economy by expanding and improving the manufacturing of copper and aluminium related products.

SR Metals' head office is located at Dam Street, Colombo 12. SR Metals was awarded as the most value added exporter in copper and aluminium manufacturing sector during the years 2013 and 2014, at the Presidential Export Awards ceremony organized by Sri Lanka Export Development Board.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகச் செய்திகள்

### ரோஹிங்யா முஸ்லிம்கள் விவகாரம் தொடர்பில் மியன்மார் தேரர்களுடன் பேச்சு



ரோஹிங்யா முஸ்லிம் மக்களின் விவகாரம் மற்றும் தேரவாத பௌத்த மத தொடர்பு நிலை உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பில் பொதுபல சேனா அமைப்பு மியன்மாரின் தேரர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையில் வரலாற்று காலம் தொடக்கம் மதரீதியில் நல்லிணக்க தொடர்பு காணப்படுகின்றது. இந்த தொடர்பினை மேம்படுத்தும் முகமாக பொதுபலசேனா அமைப்பின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் மியன்மாரின் பௌத்த மதத் தலைவர்களுடன் கலந்துரையாடலினை மேற் கொள்ள உள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடல் இன்று தொடக்கம் எதிர்வரும் 13ஆம் திகதி வரை மியன்மாரில் இடம்பெறவுள்ளது. இதன் பொழுது ரோஹிங்யா முஸ்லிம் மக்களின் விவகாரம், தேரவாத பௌத்த மத தொடர்பு நிலை மற்றும் நல்லிணக்க தொடர்பு வலுவூட்டல் போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்று பொதுபல சேனா அமைப்பின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவின் பங்காக 21 ஆயிரம் கிலோ பெற்றோல்: பிரதமர் மோடி அனுப்பிவைப்பு



இலங்கையில் ஏற்பட்டுள்ள பெற்றோல் நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில், இந்தியா பெருந்தொகைப் பெற்றோலை அனுப்பும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, நரேந்திர மோடி இடையில் 8 மாலை தொலைபேசி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே மோடி தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

அதன் முதற்படியாக, இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் தன் வசமிருக்கும் சுமார் 3 ஆயிரத்து 500 கிலோ பெற்றோலை உடனடியாக வினியோகத்துக்குக் கொண்டுவந்துள்ளது. மேலும், 21 ஆயிரம் கிலோ பெற்றோலை ஏற்றிக்கொண்டு இந்தியக் கப்பல் ஒன்று இலங்கை நோக்கிப் புறப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கொச்சியில் உள்ள எண்ணெய் துப்புரவு ஆலையில் கையிருப்பில் இருக்கும் பெற்றோலையும் தேவைக்கேற்ப அனுப்பி வைப்பதாக மோடி தெரிவித்துள்ளார்.

### இலங்கை வரும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் துணை செயலர்




இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணை செயலர் தோமஸ் செனொன் இலங்கை வருகின்றார். நாளை திங்கட் கிழமை இலங்கை வரும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணை செயலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருடன் விஷேட கலந்துரையாடல்களிலும் ஈடுப்படவுள்ளார். அதே போன்று எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பையும் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். மேலும் திங்கட்கிழமை மாலை 7.30 மணிக்கு வெளிவிவகார அமைச்சில் கூட்டு ஊடக சந்திப்பிலும் கலந்துக்கொள்ளவுள்ளார்.

